# உஷ்



பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியிருந்த காரணத்தினால்தான் தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டத்தில் திறைசேரியின் செயலாளர் கலந்துகொள்ளவில்லையென நேற்று தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணிலின் ஆலோசனைப்படியே ஆணைக்குழுவின் கூட்டத்திற்கு செல்லாமல் பாதுகாப்புச் சபையின் கூட்டத்திற்கு திறைசேரியின் செயலாளர் சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

எவ்வாறாயினும் திறைசேரியின் முன்னுக்குப் பின் முரணான வேலைகளால் தேர்தல் ஆணைக்குழு நன்றாக குழம்பிப் போயுள்ளதாக தகவல்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 185 சுபகிருது வருடம், மாசி மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை
(08.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 15, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## கமெண்ட் கந்தர்...



நாடு ஸ்திரமானதும்தான் தேர்தல் என்கிறார் ரணில்... அப்படியெண்டா தேர்தல் எண்ட ஒண்டு இப்போதைக்கு இல்லையோ..!?



# போராட்டங்களை அடக்குவோம்!

**அரசின் திட்டங்களை சீர்குலைக்க இடமளிக்கப் போவதில்லை என்கிறார் ரணில்**

**நிதி உறுதிக் கடிதத்தை அனுப்பியது சீனா**

**சர்வதேச நாணய நிதியம் தனது கடமையை இம்மாத இறுதிக்குள் நிறைவேற்றும்**

**நாடு ஸ்திரமடைந்த பின்னரே தேர்தல்**

**நாட்டு மக்களின் இன்னல்களுக்காக மன்னிப்புக் கோருகிறோம்**

"கருத்துகளை வெளியிடும் உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதனை அமைதியாகச் செய்யுங்கள். கூட்டங்கள் நடத்துவதும், போராட்டம் நடத்துவதும் ஒரு பிரச்சினையல்ல. ஆனால், இந்தப் போராட்டத்தின் மூலம் இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைத்தால், அதற்கு எதிராக இந்த அரசாங்கம் கடுமையாகச் செயல்படும் என்று கூற விரும்புகிறேன்" - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று (07) தெரிவித்தார்.

பாராளுமன்றம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில்....

02 பக்கம்

## கணக்காளர் நியமனம் தொடர்பில் சாணக்கியன் எம்.பி. எச்சரிக்கை

**கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை சுட்டிக்காட்டி சபையில் பேச்சு**



கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காளரை உடனடியாக நியமிக்காவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்போம் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சபையில் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

02 பக்கம்

## விவாதம் கோரும் சஜித்

02 பக்கம்

## ஏப்ரல் 25இல் தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

*நா. தினுஷா*

நாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி இடம்பெறும் என்பதுடன், இதற்கான ஆலோசனைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் ஒவ்வொரு மாவட்டத்துக்குமான தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நேற்று (07) அறிக்கையொன்றை வெளியிட்டே அவர் இதனை அறிவித்துள்ளார்.

02 பக்கம்

## நிதியை விடுவிக்க மறுக்க முடியாது

**நிதி அமைச்சின் செயலருக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளதாக எதிர்க்கட்சிகள் அறிவிப்பு**

*நா. தினுஷா*

தேர்தலுக்கான நிதியை விடுவிக்க நிதி அமைச்சின் செயலாளர் மறுத்தால் அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைக்கும் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சிகள் தேர்தல்....

02 பக்கம்



## சர்வதேச மகளிர் தினம் இன்று

சர்வதேச மகளிர் தினம் உலகளாவிய ரீதியில் இன்று கொண்டாடப்படுகிறது. 'பாலின சமத்துவத்துக்கான கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்பம்' என்ற தொனிப்பொருளில் இம் முறை மகளிர் தினம் கொண்டாடப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.



## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சடலங்களாக மீட்பு

**கடன்சுமையால் வவுனியாவில் துயரம்**

*வவுனியா செய்தியாளர்*

வவுனியா குட்செட் வீதி, உள்ளக வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரின் சடலங்கள் பொலிஸாரால் நேற்று (07) காலை மீட்கப்பட்டதுடன், இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டின் உரிமையாளருக்கு அவரது நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். எனினும், அவர் பதிலளிக்காததால் அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார். இதன்போது குறித்த வீட்டினுள் குடும்பஸ்தர் அவரது சிறுவயதான இருபிள்ளைகள்,

02 பக்கம்



படப்பிடிப்பு:பிரதீப் தம்பரகே

## பல்கலை மாணவர் பேரணி மீது பொலிஸ் தாக்குதல்!

**கொழும்பில் நேற்று பதற்றம்**

*நா.தினுஷா*

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழித்தல், அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைத்தல், வரிச்சுமையை குறைத்தல் உள்ளிட்ட பிரதான...

02 பக்கம்

## தீர்க்கமான கலந்துரையாடலை தவிர்த்தார் திறைசேரிச் செயலர்

**நிதியைப் பெற்றுக்கொள்வதில் சிக்கலை எதிர்நோக்குகிறது தேர்தல் ஆணைக்குழு**

*நா. தினுஷா*

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில், அரச உயர் அதிகாரிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் இடையில் நேற்று (07) இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன கலந்துகொண்டிருக்கவில்லை.

02 பக்கம்

## சிவனொளிபாதமலையில் 33 யாத்திரிகர்கள் கைது

**போதைப்பொருளைக் கண்டுபிடித்தது 'ஸ்டவுட்' மோப்ப நாய்**



*கே. சுபானி, மனூர சுதத் செல்லஹேவா*


சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருளுடன் வழிபாட்டுக்குச் சென்ற 33 பேர் கடந்த மூன்று நாட்களில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலை வழிபாட்டுக்காக கடந்த 04, 05, 06ஆம் திகதிகளில் யாத்திரிகர்களை...

02 பக்கம்

## நாணய பெறுமதி உயர்வு

02 பக்கம்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் இலங்கைக்கான விசேட தூதுவராக செயற்பட்ட கோபால சுவாமி பார்த்தசாரதிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பிக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று (07) இடம்பெற்றது. இந்திய வம்சாவளி மலையக மக்களின் எழுச்சி, ஈழத்தமிழர்களின் ஆதங்கம் மற்றும் இரு நாட்டு உறவுகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

## பல்கலை...

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்று (07) முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

கோட்டை பிரதான புகையிரத நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்திருந்தாலும், நீதிமன்ற உத்தரவின் காரணமாக கொழும்பு விகாரமாதேவி பூங்காவுக்கு அருகிலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுக்க தீர்மானித்திருந்தார்கள்.

இவ்வாறு, பிற்பகல் 2.30 மணியளவில் விகாரமா தேவி பூங்காவுக்கு அருகில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தினூடாக புறக்கோட்டையை நோக்கி பயணிக்க ஆரம்பித்தது. ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பித்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்துக்கு முன்பாக பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸாரினால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை என்பன பிரயோகிக்கப்பட்டன. பொலிஸாரின் தடையையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள், எதிர்ப்பை முன்னெடுக்க ஆரம்பித்தனர்.

மீண்டும் பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகிக்க ஆரம்பித்ததும், மாணவர்கள் சட்டபீட வளாகத்தை நோக்கி நகர்ந்தனர்.

அதனை தொடர்ந்து அங்கிருந்து மாணவர்கள் வெளியேறாதவாறு பொலிஸார் சட்ட பீடத்தை சுற்றிவளைத்திருந்தனர். சட்டப்பீட வளாகத்துக்குள் இருந்து தொடர்ச்சியாக எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியிருந்தனர். இந்நிலையில் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்த 'அரகலய' செயற்பாட்டாளர் லஹிரு வீரசேகர உள்ளிட்ட மாணவர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றிருந்தது.சட்டப்பீடத்துக்குள் இருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இனிமேல் தாக்குதல் மேற்கொள்ளப் போவதில்லை என பொலிஸார் அறிவித்ததும் சட்டப் பீடத்துக்கு முன்பாக இருந்து மாணவர்கள் தொடர்ந்து எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பிற்பகல் 6.00 மணியளவில் ஆர்ப்பாட்டம் நிறைவுக்கு வந்திருந்தது.

***புறக்கோட்டையில் பாதுகாப்பு பிரிவினர் குவிப்பு***

புறக்கோட்டை பிரதான புகையிரத நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று இராணுவ மற்றும் பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் கொழும்பின் சில பிரதேசங்களில் பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

***பிரதான வீதிகள் முடக்கம்***

தாமரைத்தடாக திரையரங்கு முதல் சுதந்திர சதுர்க்கம் வரையிலான பல்வேறு வீதிகளில் வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்தது. இதனால், சில வீதிகளில் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

***ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தடை உத்தரவு***

பொலிஸாரின் கோரிக்கைக்கமைய, நேற்றுக் காலை 11 மணிமுதல் பிற்பகல் 10 மணிவரையில் கோட்டை, கொள்ளப்பிட்டி மற்றும் கொம்பனித்தெரு உள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளில் வாகன நெரிசலை ஏற்படுத்த வேண்டாம் என்றும், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சு மற்றும் காலிமுகத்திடல் போன்ற பிரதேசங்களுக்கு பிரவேசிக்க வேண்டாம் என்றோம். பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தவேண்டாம் என்று தெரிவித்தும், முரண்பாடுகள் ஏற்பட வேண்டாம் என்று தெரிவித்தும் வசந்த முதலிகே, லஹிரு வீரசேகல உள்ளிட்ட 16 பேர் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை இந்த ஆர்ப்பட்டத்தின்போது ஊடகவியலாளர்கள், பாதுகாப்பு, அதிகாரிகள் உள்ளிட்ட சிலர் காயங்களுக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரசுக் கட்சியின் மகளிர் தின கொண்டாட்டம் மட்டக்களப்பில்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசுக்கட்சி மகளிர் அணியின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் இன்று பிற்பகல் 02 மணிக்கு களுவாஞ்சிக்குடியில் கொண்டாடப்படவுள்ளது.

இதன்போது பெண்களின் ஆற்றலை வெளிக்கொணரும் விதமாக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# தவறுக்கு வருந்துகிறோம்!

'சஜித் - பார்த்தசாரதி கொழும்பில் சந்திப்பு' என்ற தலைப்பில் நேற்று எமது பத்திரிகையின் முன்பக்கம் வெளியான செய்தியில் பார்த்தசாரதி தொடர்பில் வெளியான பிற்குறிப்பு தவறானது என்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

சஜித் பிரேமதாசவை சந்தித்த பார்த்தசாரதி இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் ஆட்சியின்போது இலங்கை விவகாரத்திற்காக நியமிக்கப்பட்ட விசேட பிரதிநிதி பார்த்தசாரதி அல்லர். ராஜீவ் காந்தியின் ஆட்சியில் இராஜதந்திரியாக செயற்பட்ட பார்த்தசாரதியே சஜித்தை சந்தித்தார் என்பதே சரியானது.

தவறுக்கு வருந்துகிறோம். (ஆ - ர் )

## நாணய..

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளதுடன், டொலரின் கொள்வனவு விலை ரூ. 318.30 ஆக காணப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியினால் நேற்றுக் காலை வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை ரூ. 335.75 ஆக இருக்கின்றது.

நாட்டின் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் அண்மைய நாட்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கணிசமாக அதிகரித்து வருகின்றது.

தரகர்கள் மற்றும் நிபுணர்களின் கூற்றுப்படி, சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்னேற்றம் மற்றும் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றத்தின் அதிகரிப்பு காரணமாக முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கை அதிகரிப்பதன் மூலம் ரூபாவின் மதிப்பு உயர்வடைகிறது.

## ஏப்ரல்...

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னெடுப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் 38 (1) (ஆ) உறுப்புரையின் பிரகாரம், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பொறுப்பான மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளினால், கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளதைப்போன்று இம்மாதம் 09ஆம் திகதி (நாளை) தேர்தல் இடம்பெறாது.

வாக்குச்சீட்டுகளை அச்சிடும் செயற்பாடுகள் மற்றும் தேர்தலை நடத்துவதற்கான ஏனைய வசதிகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத, தவிர்க்க முடியாத காரணங்களினால் குறித்த திகதியில் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது பொருத்தமானதாக அமையும் என்று தெரிவித்து தேர்தல் ஆணைக்குழுவினால் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய வாக்கெடுப்பு தினமாக ஏப்ரல் 25ஆம் திகதி ஒவ்வொரு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளினால் அறிவிக்கப்படும் என்று ஆணைக்குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## விவாதம்..

***(கே.சுபானி)***

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரை தொடர்பில் மூன்று நாட்கள் விவாதம் நடத்தப்படவேண்டும். அடுத்த அமர்வில் அதற்கான வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்று (07) கோரிக்கை விடுத்தார்.

மேலும், நாட்டின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் பதவிகாலம் இம்மாத இறுதியுடன் நிறைவடையவுள்ளது. இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை மறைப்பதற்காக தேர்தலை மேலும் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் கடும் பிரயத்தனங்களை முன்னெடுத்துள்ளதாகவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரை நிகழ்த்தினார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் விவாதம் அவசியம் என்ற கோரிக்கையை சபாநாயகரிடம் முன்வைத்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்தவிடாது தடுப்பதற்காக அரசாங்கம் 22 வகையான தந்திரோபாயங்களை முன்னெடுத்துள்ளது. அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

இந்நிலையில், தேர்தலை நடத்துவதற்கான நிதியை வழங்காதுள்ளது. இதுவே அரசின் கடைசி முயற்சியாகவுள்ளது. இதுவே ஜனநாயகத்தின் சுருக்கம்.

மேலும் 2023 மார்ச் மாதம் இறுதிக்குள் நாட்டின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடையுமா?

அவ்வாறு பதவிக்காலம் முடிவடையாத உள்ளூராட்சி மன்றங்கள் இருக்குமா? அவை எவை?

தற்போது பதவியிலிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடையும் காலம் எப்போது?

பதவிக்காலம் நிறைவடையும் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இடம்பெறுமா?

அந்தவகையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எப்போது நிறைவடையும்?

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

அதற்காக 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசு ஒப்புக்கொள்ளுமா? இவை உள்ளிட்ட கேள்விகளுக்கு பிரதமர் உள்ளிட்ட அரசு பொறுப்பு கூறும் என எதிர்பார்க்கிறேன்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வேட்புமனு எப்போது தாக்கல் செய்யப்பட்டது?

கடந்த பாராளுமன்ற அமர்வின்போது தேர்தலொன்று இல்லையென ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதனால் நான் பிரதமரிடம் இதனை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

எப்போது வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது?

வேட்புமனு கோருவதற்கான அதிகாரம் யாருக்குள்ளது? இது தொடர்பில் வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டதாயின் அந்த வர்த்தமானி அறிக்கை என்ன?

குறிப்பிட்ட காலத்துள் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை எவ்வளவு? அவ்வாறாயின், எத்தனை அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தன? என அவர் கேள்வி எழுப்பினார்.

## கணக்காளர்..

பாராளுமன்றத்தில் உரையாற்றிய சாணக்கியன் எம்.பி., இந்த விடயத்தை முன்வைத்து இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புரவை சுட்டிக்காட்டிப் பேசினார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பது 1993ஆம் ஆண்டு வர்த்தமானி ஊடாக பிரதேச செயலகமாக அறிவிக்கப்பட்ட ஒரு பிரதேச செயலகம். இதற்கு கணக்காளர் இல்லை என்று சொல்வதோ அல்லது நியமிக்கப்படவில்லை என்று சொல்லுவதோ ஓர் அலட்சியமான பதில்.

இலங்கையில் பிரதேச செயலகம் ஒன்றுக்கு கணக்காளர் தேவையில்லை என்று நீங்கள் எவ்வாறு கூறலாம்? இது முற்றுமுழுதாக ஒரு தவறான விடயம். உங்களுடைய பொது நிர்வாக அமைச்சினுடைய செயல்பாடுகள் மிகவும் மோசமாகவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களை நடத்துவது இல்லை. மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களில் எடுக்கப்படாத பல தீர்மானங்களை, மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் என்ற அடிப்படையில் செயற்படுத்துகின்றார்.

உங்களுடைய பகுதியிலுள்ள பிரதேச செயலகத்திற்கு கணக்காளர் இல்லை என்றால் அது தேவையில்லாத விடயம் என நீங்கள் கூறுவீர்களா? 29 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு பிரதேச செயலகம். அங்கு நிதியினை கையாள முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காளரை நியமிக்குமாறு கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி உத்தரவிட்டார். ஆனால் இதுவரை நியமிக்கப்படவில்லை.

தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் ஒரு இரவில் இதனை செயற்படுத்துவோம் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். அதேபோன்று இராஜாங்க அமைச்சர்களான வியாழேந்திரன், பிள்ளையான் போன்றவர்கள் கணக்காளரை நியமிக்காவிட்டால் நிர்வாகத்தினை முடக்குவோம் என்று கூறினார்கள்.

ஆனால் இன்று அவர்கள் அமைதியாக இருக்கின்றார்கள். அதேபோன்று கருணா அம்மானும் இதுகுறித்து பேசினார். ஆனால் இதுவரை எதுவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## நிதியை விடுவிக்க...

ஆணைக்குழுவுக்கு நேற்று (07) அறிவித்துள்ளன. அரசியல் கட்சிகளின் வேண்டுகோளுக்கமைய, தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று நேற்று (07) இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலின்போதே கட்சிகள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். அவ்வாறு முடிவில்லை என்றால் குறைந்தது ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கான திகதியை குறிப்பிட வேண்டும். இன்றிலிருந்து அதற்கு ஒரு மாத கால அவகாசமும் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது என்றும் அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன.

தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு எந்தவொரு அடிப்படை காரணங்களும் தற்போது இல்லை. அரசாங்கம் என்ன செய்தாலும் தேர்தலை நடத்தவேண்டியது ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என்றும் அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், தேர்தலுக்கான நிதியை விடுவிக்க நிதி அமைச்சின் செயலாளர் மறுத்தால் அவருக்கு எதிராக நீதிமன்றம் நடவடிக்கைக்கும் தயாராக இருப்பதாக கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளன. தொடர்ந்து தேர்தல் காலந்தாழ்த்தப்படும் பட்சத்தில் வீதியில் இறங்கி போராடவும், சர்வதேசத்தை நாடவும் தயாராக இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இந்த பேச்சுபவார்த்தையின்போது மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

## தீர்க்கமான...

அரசாங்க அச்சகர் ஜீ.கே.டி. கங்கானி, பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்ட அரச உத்தியோகத்தர்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

தன்னால் இன்றைய (நேற்றைய) கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது என்றும் பிறிதொரு தினத்தில் சந்திப்பதாகவும் திறைசேரியின் செயலாளர் தமக்கு அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா இந்த கலந்துரையாடலின்போது தெரிவித்துள்ளார்.

நேற்றைய கூட்டத்தில் திறைசேரியின் செயலாளர் கலந்துகொள்ளாததால் தேர்தலுக்கான நிதியைப் பெற்றுக்கொள்வதில் மேலும் சிக்கல் எழுந்துள்ளது.

இந்நிலையில், தேர்தலை நடத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு ஆணைக்குழுவிடம் கோரியுள்ளதாகவும், திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் தமது முழு ஒத்துழைப்பையும் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளதாக அரசாங்க அச்சகர் ஜீ.கே.டி. கங்கானி தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலுக்கான அச்சீட்டு நடவடிக்கைகளுக்கான காகிதாதிகள் உள்ளிட்ட மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கான நிதியை பெற்றுக்கொடுக்குமாறு திறைசேரியிடம் கோருமாறும் ஆணைக்குழுவின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பை பொலிஸ் மா அதிபருக்கும் அறிவிக்குமாறு கோரியுள்ளோம். அதற்கான சேவைகளை அவர்கள் வழங்கியதும் இன்று அல்லது நாளை தேர்தலுக்கான திகதி தீர்மானிக்கப்படும்.

தபால்மூல வாக்கெடுப்புக்காக அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையை அறிவித்திருக்கிறோம். அவற்றை மீள் பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னரே வாக்குச்சீட்டுகளை விநியோகிக்க நேரிடும். ஆணைக்குழு தேர்தல் திகதியை அறிவித்ததும் எங்களின் சகல பங்களிப்பையும் பெற்றுக்கொடுப்போம். இந்த கலந்துரையாடல் வெற்றிகரமான நிறைவடைந்தது.

பொலிஸாரும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தார்கள். அவர்களும் பாதுகாப்பை வழங்குவதாகவே அறிவித்திருந்தார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

## ஒரே குடும்பத்தைச்...

மனைவி ஆகியோர் மர்மமான முறையில் மரணமடைந்திருந்தமையை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதுடன் உடனடியாக பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதேபகுதியை சேர்ந்த சிவபாதசுந்தரம் கௌசிகன் (42) வீட்டின் விறாந்தை பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதுடன், அவரது மனைவியான கௌ.வரதராயினி (36), இருபிள்ளைகளான கௌ.மைத்ரா (09), கௌ. கேசரா (03) ஆகியோர் உறங்கியபடியும் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவரும் வவுனியா பொலிஸார் மீட்கப்பட்ட சடலங்களை சட்டவைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நேற்றுமாலை மேற்கொண்டனர்.

மனைவியையும் பிள்ளைகளையும் கொலைசெய்துவிட்டு தந்தை தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன் கடன் சுமையே இதற்குக் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவித்தனர்.

## சிவனொளிபாதமலையில்...

அழைத்துச் சென்ற வாகனங்களை சோதனைக்குட்படுத்தியபோது பல்வேறு வகையான போதைப்பொருளுடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித டி அல்விஸின் ஆலோசனைக்கமைய 'ஸ்டவுட்' என்ற பொலிஸ் மோப்பநாயின் உதவியுடன் சிவனொளிபாதமலை யாத்திரிகர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டபோதே போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. ஹட்டன் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு மேலதிகமாக, ஹட்டன், கினிகத்தேனை மற்றும் பொல்பிட்டிய, நல்லத்தண்ணி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போது, கஞ்சா, கஞ்சா கலந்த போதைப்பொருள், போதை வில்லைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப்பொருளுடன் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரும் 18 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் அவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## போராட்டங்களை...

நேற்றுக்காலை கூடியபோது பொருளாதாரத்தின் தற்போதைய நிலை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து விசேட உரை நிகழ்த்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து நிதி உறுதி கடிதம் நேற்றிரவு(திங்கட்கிழமை) கிடைத்ததையடுத்து, தானும் மத்திய வங்கி ஆளுநரும் கையெழுத்திட்ட இணக்கப்பாட்டுக் கடிதம் சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்திற்கு அறிவித்தார்.

இதன்படி, நாட்டுக்கான தனது கடமையை நிறைவேற்றியுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் தனது கடமையை இம்மாத இறுதிக்குள் நிறைவேற்றும் என எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தற்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த வேலைத்திட்டம் சீர்குலைந்தால் 2022 பெப்ரவரி மாத நிலைமையைவிட மிகவும் ஆபத்தான நிலைக்கு நாடு தள்ளப்படலாம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை பின்வருமாறு,

நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளை படிப்படியாகத் தீர்க்கும் வகையில், ஸ்திரப்படுத்தல் திட்டம் வகுக்கப்பட்டது. அதற்கு பொருத்தமான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தியது. அவற்றில் சிலவற்றை இந்த உயரிய சபையில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எரிவாயு மற்றும் பெற்றோல் என்பன வழமை போன்று கிடைப்பதை உறுதி செய்வது, பாடசாலைகள் மற்றும் பரீட்சைகளை உரிய முறையில் நடத்துவது, தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவது, உரங்கள் வழங்குவது, சமுர்த்தி பயனாளர்களுக்கு மேலதிக நிதி வழங்குவது மற்றும் 2019இல் அமுல்படுத்தப்பட்ட வரிக் கொள்கை மீள செயற்படுத்துவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள அரசுக்கு நேரிட்டது. 2019இன் பிற்பகுதியில் அவசரகால அமுல்படுத்தப்பட்ட வரிக் குறைப்புகளுக்குப் பிறகு, அரசாங்க வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 வீதமாகக் குறைந்தது. அதை சீர்செய்ய புதிய வரிக் கொள்கைகளை முன்னெடுக்க நேரிட்டது.

அதேபோல், மத்திய வங்கியின் நிதிக் கொள்கைகளின் கீழ் வட்டி விகிதங்களை உயர்த்த நேரிட்டது. தொடர்ந்து அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டி விகிதங்களை உயர்த்துவதே எம்மிடமிருந்த சாதகமான நடவடிக்கையாகும். கடந்த ஆண்டு செப்டெம்பரில் சராசரி பணவீக்கம் 70வீதம் வரை உயர்ந்தது. உணவுப் பணவீக்கம் 90 சதவீதத்தைத் தாண்டியது. ஆனால் தற்போது பணவீக்க வேகம் 50 வீதம் வரை குறைந்துள்ளது. அத்தோடு, உணவுப் பணவீக்கமும் 54 சதவீதமாகக் குறைந்துள்ளது. மேலும், அந்நியச் செலாவணி பற்றாக்குறையால், பணப் பரிமாற்ற விதிகளை கடுமையாக்கவும், இறக்குமதியை கட்டுப்படுத்தவும் நேரிட்டது.

எங்களால் வெளிநாட்டுக் கடனைச் செலுத்த முடியாது என அறிவித்தவுடன், வெளிநாடுகளும் நிதி நிறுவனங்களும் இலங்கையுடனான நிதிக் கொடுக்கல் வாங்கல்களைக் கட்டுப்படுத்தின. உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் கூட புதிதாக நிதி வழங்குவதை நிறுத்தின. வெளிநாட்டு உதவியில் செயல்படுத்தப்பட்ட அனைத்து திட்டங்களையும் நிறுத்த நேரிட்டது. கடன்பத்திரங்களை கூட திறக்க முடியவில்லை. இலங்கைக்கு கடன் வழங்கக் கூடாது என்ற தர நிலைக்கு, கடன் தர நிர்ணய நிறுவனங்கள் எமது நாட்டைத் தரமிறக்கின. ஐ.எம்.எவ். உடனான பேச்சுவார்த்தையின் போது, அதன் உடன்பாட்டைப் பெறுவதற்கு பல பணிகளை முன்கூட்டியே செய்ய வேண்டியிருந்தது. மின்சார விலையை மறுசீரமைத்தல், பெற்றோலிய விலைகளை மறுசீரமைத்தல், மத்திய வங்கியின் சுயாதீனத்தை உறுதி செய்தல், பணவீக்கத்தை கட்டுப்படுத்த வட்டி விகிதங்களை உயர்த்துதல், பொது நிறுவனங்களை மறுசீரமைத்தல், சமூக பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துதல், அரசாங்க வருமானத்தை அதிகரிக்க பணியாற்றுதல் மற்றும் பொது செலவினங்களைக் கட்டுப்படுத்துதல். பெற்றோலிய மற்றும் மின்சாரத் துறைகளில் போட்டித்தன்மையை விரிவுபடுத்துதல் போன்ற பல விடயங்களை முன்கூட்டியே செய்ய வேண்டியிருந்தது. இலங்கை முன்கூட்டியே செய்திருக்க வேண்டிய அந்தப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

மேலும், இந்த நாட்டு மக்கள் படும் இன்னல்களை நான் அறிவேன். அதற்காக அரசாங்கம் என்ற வகையில் மன்னிப்புக் கோருகிறோம்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த பல கடினமான பொருளாதார நடவடிக்கைகளை எடுத்தோம். பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கான முயற்சிகளை தற்போது மேற்கொண்டு வருகிறோம். இதனால் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் தொடர்ச்சியான இன்னல்கள் ஏற்படும். இத்தகைய கடினமான மற்றும் சிக்கலான சூழ்நிலைக்கு மத்தியில், கடந்த 7-8 மாதங்களாக செலவழித்து, அதை ஒரு சாதகமான நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். இதிலிருந்து முன்னேற பொருளாதார சீர்திருத்தங்கள் தேவை. இதை நாட்டில் உள்ள அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு செல்வாக்குச் செலுத்தும் குழுக்கள், அரசியல் கட்சிகள், தொண்டர் குழுக்கள், தொழிற்சங்கங்கள் போன்றவை இது குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

வரிச்சுமை அதிகமாக உள்ளதாக தொழில் வல்லுநர்கள் கூறுகின்றனர். இருப்பினும், இந்த நிலைமை ஒரு குறுகிய காலத்திற்கு பராமரிக்கப்பட வேண்டும். இல்லையெனில், இந்தத் திட்டம் சீர்குலைந்தால், 2022 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இருந்த நிலையை விட மிகவும் ஆபத்தான இடத்திற்கு நாடு தள்ளப்படலாம். அப்போது சம்பளம், ஓய்வூதியம், வேலை என்பன பறிபோகும். தொழிற்சாலைகள் மூடப்படும், பாடசாலைகள் தினமும் மூடப்படும் என்று பலரும் நினைத்தார்கள். அவற்றை நாம் ஓரளவு கட்டுப்படுத்தியுள்ளோம். ஆனால், சமூகத்தில் செல்வாக்கு மிக்க குழுக்கள் நாம் முன்வைத்த வேலைத்திட்டத்தை பல்வேறு நடவடிக்கைகள் மூலம் நாசமாக்கினால், அதிலிருந்து உருவாகும் சமூக மாற்றம், மிகவும் ஆபத்தானதாக இருக்கும். இது நம் சமூகத்தில் முன்னெப்போதும் இல்லாத சோகமான காலத்திற்கு வழிவகுக்கும்.

கருத்துகளை வெளியிடும் உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதனை அமைதியாக செய்யுங்கள். கூட்டங்கள் நடத்துவதும், போராட்டம் நடத்துவதும் ஒரு பிரச்சினையல்ல. ஆனால், இந்தப் போராட்டத்தின் மூலம் இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைத்தால், அதற்கு எதிராக இந்த அரசாங்கம் கடுமையாகச் செயல்படும் என்று கூற விரும்புகிறேன்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான பயணத்தில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சியை நான் கேட்டுக்கொள்கிறேன். இதனை நிறைவேற்றிய பின்னர் ஜனாதிபதி தேர்தலா, பொதுத் தேர்தலா எது தேவை என்பதை தீர்மானிக்க முடியும். அதுவரை நீங்கள் காத்திருக்கத் தயாரா, இல்லையா என்று கேட்கிறேன். உங்களுக்கு இதை ஏற்கவோ நிராகரிக்கவோ முடியும் என்றார்.

# முதல் தடவையாகக் கூடும் எட்டு துறைசார் மேற்பார்வைக் குழுக்கள்

எட்டு துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் இன்றும் நாளையும் முதல் தடவையாகக் கூடவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய இந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் எட்டுக்குமான தலைவர்கள் முதலாவது கூட்டத்தில் நியமிக்கப்படவிருப்பதுடன், இதில் நான்கு குழுக்களுக்கான தலைவர்கள் ஆளும் கட்சியிலிருந்தும், நான்கு குழுக்களுக்கான தலைவர்கள் எதிர்க்கட்சியிலிருந்தும் நியமிக்கப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

பதினேழு துறைசார் மேற்பார்வைக் குழுக்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அண்மையில் சபையில் அறிவித்திருந்ததுடன், இதில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எட்டுக் குழுக்களே இன்றும் நாளையும் கூடவுள்ளன.

1) மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு (உறுப்பினர்கள் எண்ணிக்கை 12)

2) நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு (உறுப்பினர்கள் எண்ணிக்கை 12)

3) பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு (உறுப்பினர்கள் எண்ணிக்கை 12)

4) சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு (உறுப்பினர்கள் எண்ணிக்கை 12)

5) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு (உறுப்பினர்கள் எண்ணிக்கை 11)

6) பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு (உறுப்பினர்கள் எண்ணிக்கை 12)

7) பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு (உறுப்பினர்கள் எண்ணிக்கை 09)

8) வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு (உறுப்பினர்கள் எண்ணிக்கை 11)

# மத்திய வங்கிக்கு நிர்வாக - நிதிசார் தன்னாட்சியை வழங்க 'இலங்கை மத்திய வங்கி' சட்டமூலம் பாராளுமன்றத்தில்



இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் முதலாவது மதிப்பீட்டுக்காக சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால் நேற்று (07) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நிர்வாக மற்றும் நிதிசார் தன்னாட்சியை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியை தாபிப்பதற்காகவும், மத்திய வங்கியில் தற்பொழுது காணப்படும் பணச்சட்டத்தை நீக்குவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலமாக இது முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டமூலத்திற்கமைய இலங்கை மத்திய வங்கியின் தன்னாட்சிக்கு எல்லா நேரங்களிலும் மதிப்புக்கொடுத்தல் வேண்டும் என்பதுடன், ஆள் எவரும் அல்லது உருவகம் எதுவும், மத்திய வங்கியின் ஆளுநர் ஆளும் சபையினதும் பணக் கொள்கை சபையினதும் வேறு உறுப்பினர்கள் அல்லது மத்திய வங்கியின் ஊழியர்கள் இச்சட்டத்தின் கீழ் தமது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அவர்களினதும் ஏதேனும் செல்வாக்கைச் செலுத்துதலோ அல்லது மத்திய வங்கியின் செயற்பாடுகளுடன் தலையிடுதலோ ஆகாது.

அத்துடன், உள்நாட்டு விலை நிலையுறுதியை எய்துவது, பேணுவது, நிதிசார் முறைமையின் நிலையுறுதியை உறுதிப்படுத்திப் பேணுதல் என்பன மத்திய வங்கியின் ஆரம்ப குறிக்கோள்களாகும் என சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய வங்கியின் அலுவல்களினது நிர்வாகத்தையும் முகாமைத்துவத்தையும் மேல் நோக்குகின்ற மற்றும் பணக்கொள்கை தவிர மத்திய வங்கியின் பொதுக் கொள்கையைத் தீர்மானிக்கின்ற பொறுப்புடைய 'ஆளும் சபை' ஸ்தாபிக்கப்படும். இதன் தலைவர் மத்திய வங்கியின் ஆளுநராக இருப்பதுடன், துறைசார் நிபுணத்துவம் கொண்ட ஆறு பேர் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

# நேற்றும் 14 புகையிரத சேவைகள் இரத்து

இயந்திர சாரதிகளுக்கான வெற்றிடம் காரணமாக நேற்றும் 14 புகையிரத சேவைகள் இரத்துசெய்யப்பட்டுள்ளதாக புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில், புகையிரத கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் பல சங்கங்களுக்கு இடையில் நேற்று கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, அரச சேவை ஆணைக்குழுவை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் மற்றும் பிரச்சினை குறித்து அமைச்சரவையில் முன்வைப்பதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சாரதி வெற்றிடம் காரணமாக நேற்று முன்தினமும் 24 புகையிரத சேவைகள் இரத்துசெய்யப்பட்டன.

இதன்காரணமாக, ஓய்வுபெற்ற சாரதிகளை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான கோரிக்கையினை புகையிரதத் திணைக்களம் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புனித பூஜை என்ற போர்வையில் பொதுமக்களிடம் பணம் வசூலிப்பு

## போலி பக்தர்கள் மூவர் கம்பளையில் கைது



(கம்பளை நிருபர்)

புனித பூஜை என்ற போர்வையில் பௌத்த துறவி ஒருவருடன் சுவாமி படங்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பொதுமக்களிடம் சட்டவிரோதமாக பொருட்கள் மற்றும் பணம் வசூலித்த போலி பக்தர்கள் மூவரை நேற்று முன்தினம் (06) கம்பளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கம்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய குறித்த சந்தேக நபர்களை பொறுப்பில் எடுத்து விசாரணைகளை மேற்கொண்டதில் சிவனொளிபாதமலை யாத்திரையை அடிப்படையாகக்கொண்டு பணம் வசூலித்த விடயம் தெரிவந்துள்ளது.

விசாரணையின்போது தாங்கள் சட்ட ரீதியாகவே புனித பூஜைக்கு நிதி சேகரித்ததாக சந்தேக நபர்களில் ஒருவரான பௌத்த பிக்கு கூறியதையடுத்து, கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் துஷாரி தென்னகோன் உடபலாத்த சங்கநாயக்கர் பீடம் உட்பட இதனுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருடனும் பொலிஸ் பொறுப்பதிகாரி தொடர்புகொண்டு கேட்டபோது அவர்கள் அனைவருமே அப்படியான ஒரு அனுமதியை தாங்கள் யாருக்கும் வழங்கவில்லையென கூறியுள்ளார்.

இதையடுத்து குறித்த நபர்களை கம்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிவனொளிபாதமலையின் புனிதத்தை கெடுக்கவேண்டாமென கடுமையாக எச்சரித்து நகரைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டுமெனக் கோரிக்கை விடுவித்தார்.

# தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி கம்பஹாவில் ஒருவர் போராட்டம்

கம்பஹா – முதுன்கொட பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி நபரொருவர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.




டயலொக் நிறுவனத்தில் 20 வருடங்களாக கடமையாற்றிய தனக்கு துரோகம் விளைவிக்கப்பட்டுள்ளதாகக் கோரி, ஒருவர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

கம்பஹா, முதுன்கொட பகுதியிலுள்ள டயலொக் நிறுவனத்தின் தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி குறித்த நபர் எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் மாசி மாதம் 24ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும், நோய், கடன், எதிரி இவை எதுமே பாதிப்பை ஏற்படுத்தாது.

**ரிஷபம்:** புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும், மனம் கண்டபடி அலையும்.

**மிதுனம்:** எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம், வீடு, வாகனம் விற்பது வாங்குவது கவனம்.

**கடகம்:** நீங்கள் கேட்காமலேயே நண்பர்களின் உதவிகள் கிடைக்கும், துணிச்சலால் அனைத்தையும் வெற்றிகொள்வீர்கள்.

**சிம்மம்:** குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்திகள் ஏற்படும், குடும்பத்தில் குழப்ப நிலைகள்உருவாகும்.

**கன்னி:** குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும், நோயிலிருந்து விடுதலையடைவீர்கள்.

**துலாம்:** தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும், உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

**விருச்சகம்:** தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களைப் பெறுவீர்கள், எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு:** தொழில் மூலமாக பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும், புதிய பதவிகள் வந்துசேரும்.

**மகரம்:** பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும், தந்தைக்கும் உங்களுக்கும் இடையிலான உறவு பாதிக்கப்படும்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும், வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**மீனம்:** கூட்டு வியாபாரத்தில் அதிக இலாபம், தடைப்பட்ட திருமணத் திகதி உறுதிப்படுத்தப்படும் நாள்.

**திதி** : பிரதமை பி.ப.7.43 வரை பின் துவிதியை

**நட்சத்திரம்** : உத்தரம் பி.இ.4.20 வரை பின் அத்தம்

**யோகம்** : அமிர்தசித்த யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை** : தென் மேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** :மு.ப. 9.22 – 10.22 மணி வரை

**ராகு காலம்** : 12.22 – 1.52 மணி வரை

**எமகண்டம்** : 7.52 – 9.22 மணி வரை

**குளிகை** : 10.52 – 12.22 மணி வரை

**சந்திராஷ்டமம்** : கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : பரணி, பூரம், பூராடம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்** :

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு ஐ.எம்.எவ். பாராட்டு

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்திற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டு தெரிவித்துள்ளதாகவும் எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாம் தவணைத் தொகையை வழங்குவது தொடர்பில் சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே சாகல ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார நிலையை உணர்ந்து அத்தியாவசிய சேவைகள் மற்றும் ஏனைய சேவைகளை தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற வகையில் முறையாக நடைமுறைப்படுத்த ஆதரவளிக்க வேண்டும்.

வரி விதிப்பினால் தொழில் வல்லுநர்கள் எதிர்நோக்கும் சிரமத்தை அரசாங்கம் புரிந்துகொண்டு இதுகுறித்து ஆய்வுசெய்து தேவையான திருத்தங்களை எதிர்வரும் காலங்களில் கொண்டுவரவுள்ளது. அதனால் தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற வகையில் நாட்டை சீர்குலைக்கும் முயற்சிக்கு பங்களிப்புச் செய்ய வேண்டாம். அவ்வாறு நடந்தால் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கம் ஏற்படும்.

மாதாந்த வருமானத்திற்கு விதிக்கப்படும் வரியின் வீதத்தினால் தமது அன்றாடச் செலவுகள் மற்றும் வங்கிக் கடன் தவணைகளை நிர்வகிக்க முடியாதிருப்பதாகவும் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தினால் அந்த நிலைமை மேலும் மோசமடைவதாகவும் சுட்டிக்காட்டிய தொழிற்சங்கத் தலைவர்கள், வருமானத்தின் மீதான வரிவிதிப்பு சதவீதத்தை மீளாய்வு செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், அரசாங்கத்தின் வரி கட்டமைப்பில் உள்வாங்கப்படாதவர்கள் இன்னும் பலர் இருப்பதால், அவர்களைக் கண்டுபிடித்து, அவர்களிடம் வரி அறவிடும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டால், அரசாங்கத்திற்கு பெருமளவு வரி வருமானத்தைப் பெறமுடியும்.

வருமானம் ஈட்டும்போது விதிக்கப்பட்ட வரியை நீக்குவது தொடர்பாக மார்ச் 08ஆம், 09ஆம் திகதிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெலிகமவில் மீனவர்களைத் தாக்கி 1000 கிலோ மீன்கள் கொள்ளை

வெலிகம, பத்தேவத்த மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் மீது 20 பேர் கொண்ட கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதுடன், மிரிஸ்ஸ கடலில் வைத்து அவர்களது 1,000 கிலோ மீன்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டு படகுகளில் வந்த கடற்கொள்ளையர் குழுவொன்றே கடற்கரையிலிருந்து கடலின் சுமார் 6 மைல் தொலைவில் வைத்து மீன்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பத்தேவத்த மீன்பிடிப் படகில் மீன்பிடிக்கச் சென்ற லக்கிஷாப் என்ற மீன்பிடி படகிலிருந்த மீன்களே கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, மார்ச் 08ஆம் திகதி, புதன்கிழமை

# மகளிருக்குத் தேவை மதிப்பு!

இன்று சர்வதேச மகளிர் தினமாகும். பெண்களை வெறும் போகப்பொருளாக மாத்திரமே பார்க்கும் இந்தக் காலத்தில் அவர்களை மாண்புடன் நோக்க வேண்டிய மறுக்கமுடியாத தேவை இருக்கிறது.

உண்மையில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாட்டத்திற்கானதல்ல. அனுஷ்டிக்கப்பட வேண்டியது அல்லது நினைவுகூரப்பட வேண்டியது. மேற்கத்திய கலாசாரத்தில் பெண் போகப்பொருள். ஆண் அனுபவிப்பதற்காகப் படைக்கப்பட்டவள். இதனால் அடிப்படை உரிமைகள் கூட இல்லாத பெண்கள் தங்கள் உரிமைகளை உரக்கக் கேட்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அல்லது அதற்கும் சற்று முன்னதாக கூலித்தொழிலாளர்களாக இருந்த பெண்கள், தொழிலாளர் அமைப்புகளோடு இணைந்து நியூயார்க்கில் வேலை நேரக் குறைப்பு, நியாயமான கூலி இவற்றுக்காகப் போராட்டங்களை நடத்தினர். இந்த நாளை அமெரிக்காவில் 'மகளிர் தினம்' என்றனர்.

ஐரோப்பிய நாடுகளில், தங்களுக்கும் வாக்குரிமை வேண்டும் என்று பெண்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர். அதில் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. ஒஸ்ட்ரியா, டென்மார்க் போன்ற நாடுகளிலும் கம்யூனிஸ்ட்களின் தலைமையில் பெண்கள் தங்களுக்கான உரிமைகளைக் கேட்டுப் போராட்டங்களை மேற்கொண்டனர். சோவியத் ஒன்றியத்தில் 1917ஆம் ஆண்டு மார்ச் எட்டாம் நாள் இது ரொட்டி மற்றும் அமைதிக்கான போராட்டம் என்று எழுந்தது.

ஐரோப்பிய நாடுகளில் இதை 'பெண்கள் சர்வதேச போராட்ட நாள்' என்றே குறிப்பிட்டனர். அதுவரை கம்யூனிஸ்ட்கள் மட்டும் அனுஷ்டித்துக்கொண்டிருந்த மகளிர் தினம் 1967ஆம் ஆண்டுக்குப் பின்னரே சர்வதேச அளவில் பார்க்கப்பட்டது. 1975ஆம் ஆண்டை ஐ.நா. சபை 'சர்வதேச பெண்கள் ஆண்டு' என்று அறிவித்தது. 1977ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் மார்ச் எட்டாம் நாள் சர்வதேச மகளிர் தினமாயிற்று.

உலக மக்கள் தொகையில் ஏறக்குறைய ஐம்பது சதவீதம் பெண்கள் உள்ள நிலையில், சட்டம் இயற்றும் பொறுப்பில் உள்ள உறுப்பினர்களில் பெண்கள் எண்ணிக்கை சுமார் இருபத்தாறு சதவீதம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

உலகில் உள்ள நாடுகளில் நியூஸிலாந்து, ருவாண்டா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கியூபா, மெக்சிக்கோ, நிகராகுவா என ஆறு நாடுகளில் மட்டுமே அந்நாடுகளில் உள்ள பாராளுமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஐம்பது சதவீதத்திற்கும் மேல் உள்ளது.

சுதந்திரத்திற்குப் பிறகான நம் நாட்டின் வரலாற்றில் உலகின் முதல் பெண் பிரதமர் என்ற அந்தஸ்தை வழங்கிய நாடு இலங்கை. அதற்குப் பின்னர் நாட்டின் உயர்பதவிகளில் பெண்கள் கோலோச்சினாலும் காலப்போக்கில் தேசிய அரசியலில் பெண்களுக்குரிய இடம் முறையாக வழங்கப்படவில்லை என்பதே உண்மை. பின்னர் முக்கியமான இடங்களில் பெண்கள் புறக்கணிக்கப்பட்டனர், இன்னும் புறக்கணிக்கப்படுகின்றனர் என்ற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தொற்றுமை இல்லாத காரணத்தால், கடந்த காலங்களில் பெண்களுக்கான கல்வி, வேலை வாய்ப்பு, சமூக அந்தஸ்து ஆகியவற்றில் பெரும் முன்னேற்றம் ஏற்படவில்லை. பாராளுமன்றம், மாகாணசபைகளில் மட்டுமல்லாது, உள்ளூராட்சி மன்றங்களிலும் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் போதிய அளவு இல்லை. எப்படியாயினும் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்படும் பெண்கள் தங்கள் கடமையை முழுமையாக நிறைவேற்ற ஒத்துழைப்பு கிடைப்பதில்லை என்பதே உண்மை.

பெண்கள் நலன் காக்கும் சட்டங்களைக் கொண்டுவரும் வகையில் பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டும். ஆனால், அரசியல் பற்றி அறிந்து கொள்வதில் கூட பெரும்பாலான பெண்களிடையே ஆர்வமில்லை என்பதே நிதர்சனம். பெண்கள் அரசியலில், பொதுவாழ்வில் ஈடுபடுவதை அவர்களது குடும்பத்தில் உள்ளவர்களே ஆதரிப்பதில்லை.

பழைமைவாத கருத்துகள் இன்னமும் நம் சமூகத்தில் வேரூன்றி இருப்பது, அரசியல் அதிகாரத்தை அனுபவிக்கும் ஆண்கள், அந்த அதிகாரத்தை பெண்களுடன் பகிர்ந்து கொள்ள முன்வராதமை போன்றவையும் ஆண்களுக்கு இணையாக பெண்கள் அரசியல் ஈடுபடாமைக்கு காரணங்களாகும்.

தேர்தல் காலத்தில் பெண் வாக்காளர்களின் ஆதரவை குறிவைத்து தங்களின் தேர்தல் அறிக்கையில் இலவசங்களை அறிவிக்கும் அரசியல் கட்சிகள் கூட தங்கள் கட்சியின் வேட்பாளர்கள் பட்டியலில் பெண்களுக்குரிய பிரதிநிதித்துவம் அளிப்பதில்லை. இவை அனைத்தையும் தாண்டி அரசியலில் ஈடுபடும் பெண்கள் பல்வேறு எதிர்ப்புகளை சந்திக்க நேர்கிறது. 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற மகாகவி பாரதியாரின் கனவு முழுமையாக நனவாக அரசியல் அதிகாரத்தை அடையும் தகுதியை பெண்கள் தாங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும். சிலி நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாகவும் ஐக்கிய நாடுகள் சபைகளின் மனித உரிமை உயர்ஸ்தானிகராக பொறுப்பு வகித்த மிக்கெல்லே பச்செலெவும் அந்தளவு தூரம் வந்தது தடைக்கற்களை உடைத்தெறிந்ததால்தான்.

'பெண்களுக்கு மகளிருக்கு வாக்குரிமை தருவதால் மட்டுமோ, அவர்கள் வாக்களிப்பதால் மட்டுமோ ஜனநாயகம் முழுமையடையாது. அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டால் மட்டுமே ஜனநாயகம் முழுமை பெறும். அத்தகைய முழுமையான ஜனநாயகத்தை நாட்டில் மலரச் செய்ய நாம் இந்நாளில் உறுதியேற்போம்.

## இன்றைய நாளில்...

- 1618 – யோஹானஸ் கெப்ளர், கோள்களின் இயக்கங்களுக்கான மூன்றாவது விதியைக் கண்டுபிடித்தார்.
- 1906 – பிலிப்பைன்ஸில் அமெரிக்கத் துருப்புகளால் ஏறத்தாழ 600 ஏதிலிகள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1908 – திருநெல்வேலி எழுச்சி: திருநெல்வேலியில் பிரித்தானியர்களுக்கு எதிரான போராட்டத்தில் நால்வர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.
- 1911 – அனைத்துலக மகளிர் நாள் முதன்முதலாக டென்மார்க்கில் கொண்டாடப்பட்டது.
- 1920 – முதலாவது நவீன அரபு நாடான 'சிரிய அரபு இராச்சியம்' உருவாக்கப்பட்டது.
- 1950 – சோவியத் ஒன்றியம் தன்னிடம் அணுகுண்டு இருப்பதாக அறிவித்தது.



# மாதவிடாய் குறித்த சிந்தனைகளில் மாற்றம் தேவை!

## சொல்கிறார் இந்துமதி ஹரிகரதாமோதரன்

**பிரியதர்ஷினி சிவராஜா**

மாதாந்தம் இயற்கையாகப் பெண்களுக்கு ஏற்படும் இரத்தப் போக்கைத் தீண்டத்தகாதது என்றும், தீட்டு என்றும் கூறி அவர்களை நலிவுற்றவர்களாக்கும், அந்நியப்படுத்தும் செயற்பாடுகள் இன்றளவிலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. பெண்ணின் உடலில் இயற்கையாக நிகழும் ஓர் உயிரியல் மாற்றத்திற்கு மதிப்பளிக்காமையும் அது குறித்து கௌரவமான உரையாடல்களை சமூகத்தில் நிகழ்த்தாமையும் இன்றளவிலும் பெண்களும் பெண் பிள்ளைகளும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றமைக்குக் காரணங்களாக அமைந்து விடுகின்றன.

பெண்களுக்கு இயற்கையாகக் கடவுள் உயிர்களின் மீள்படைப்புக்காக அளித்த வரத்தைத் தீண்டத்தகாததாகவும் அசுத்தமானதாகவும் புனிதமற்றதாகவும் பார்க்கும் சிந்தனைகளில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படாதவரை பெண்கள் நலன் மற்றும் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட எந்த தலைப்புகள் பற்றியும் குரல் கொடுப்பதில் அர்த்தமே இல்லை. அதேநேரம் இன்றைய சர்வதேச பெண்கள் தினமாக மார்ச் 8இல் இந்த விடயத்தைத் தவிர்த்துப் பெண்கள் நலன்கள் சம்பந்தப்பட்ட எந்த விடயத்தைப் பற்றி பேசுவதிலும் பயனில்லை. மாதவிடாயின்போது ஏற்படும் இரத்தப்போக்குக்காக பயன்படுத்தப்படும் செனிட்டரி நெப்கின்கள் எனப்படும் அணையாடைகளைப் பெண்களுக்கான அத்தியாவசியப் பண்டமாகப் பார்க்காமல் ஆடம்பரமான சொகுசுப் பண்டமாகக் கருதி, வரிவிதித்து பெண்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது எமது அரசாங்கம்.

இன்றும் அதன் உள்ளூர் மூலப்பொருட்களுக்கான வரிகளை இல்லாமல் செய்தாலும் அதன் விலைகள் முன்பிருந்த அளவுக்குச் சற்றும் குறையாமல் இருப்பதும் எங்கள் இலங்கையில் மட்டுமே மாதவிடாயை எதிர்கொள்பவர்களுக்கு (Menstruators) நடக்கும் அராஜகம் என்பதில் எந்தத் தவறுமேயில்லை. பெண்களின் உரிமைகளுள் மிகப் பிரதானமானதாக இருக்கும் இனப்பெருக்க உரிமைக்குள் அடங்கும் மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான (Dignified Menstruation) வாய்ப்பு என்பது இன்றளவிலும் பேச்சளவில் மட்டுமே உள்ள நிலையில், இலங்கையில் அதற்காகக் குரல் கொடுத்து வரும் சிவில் சமூகச் செயற்பாட்டாளரும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரியும், மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான உலகளாவிய தெற்குக் கூட்டணியின் (Global South Coalition for Dignified Menstruation) வழிநடத்தற்குழுவின் உறுப்பினருமான இந்துமதி ஹரிகரதாமோதரன் இவ்விடயம் குறித்து அளித்த நேர்காணல் பின்வருமாறு:

**இலங்கையில் மாதவிடாய்க்கால வறுமை பற்றியும் (Period poverty) மாண்புடன் கூடிய மாதவிடாய் (Dignified Menstruation) பற்றியும் விழுது அமைப்பு மாத்திரமே இந்த எண்ணக்கருவுடன் நெருங்கிப் பணியாற்றுகின்றமைக்கான காரணம் பற்றியும் கூற முடியுமா?**

கடந்த 2019ஆம் ஆண்டில் திருகோணமலை மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த சில பெண்கள் எமது பயிற்சிப்பட்டறையொன்றில் பங்குபற்றியிருந்தனர். அப்போது அவர்கள் தாம் ஆடைத்தொழிற்சாலைகளில் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பணியாற்றுவதாகவும் தமக்குத் தினந்தோறும் காலைவேளைகளில் 'விற்றமின் சி' என்று கூறி மாத்திரையொன்றைத் தருவதாகவும் அந்த மாத்திரையைத் தொடர்ச்சியாக உட்கொள்ள ஆரம்பித்து சில நாட்களில் மாதவிடாய் தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டதாகவும் கூறியிருந்தனர். இந்தப் பிரச்சினையைப் பற்றித் தாம் ஆரம்பத்தில் பெரிதாகக் கணக்கிலெடுக்காதபோதிலும், சக பெண் ஊழியர்களும் இதனைப் பற்றிக் கதைக்க ஆரம்பித்த பின்னரே இதனைப் பற்றிச் சிநதிக்கத் தலைப்பட்டதாகவும் கூறினர். இதனால் குறிப்பிட்ட ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய பலர் அங்கிருந்து தாமதமின்றி விலகிச் சென்றதாகவும் குறிப்பிட்டதுடன், தாம் உடலளவில் பெரிதும் இன்றுவரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமது பிரதேசங்களிலிருந்து யாராவது குறித்த ஆடைத்தொழிற்சாலைக்குச் சென்றாலும் தாம் அவர்களை அங்கு செல்லவிடாது தடுப்பது மட்டுமன்றி, அவ்வாறு மாத்திரைகள் தருமிடத்து அதனை உட்கொள்ள வேண்டாமென்றும் கூறியதாகவும் தெரிவித்திருந்தனர்.

இது பற்றி நாம் கலந்துரையாடிய தருணத்தில்தான் விழுதும் மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான உலகளாவிய தெற்குக் கூட்டணியுடன் இணைந்திருந்தது. பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்யப் பணிக்குப் போகும் ஒருவரைப் போகவிடாமல் தடுப்பது குற்றமாயினும் அவர்கள் அதற்குக் கூறும் காரணங்கள் பற்றி நாம் ஆராய வேண்டிய தேவையும் எமக்கு ஏற்பட்டது. நாம் மாவட்டங்கள் தோறும் இது பற்றிய உரையாடல்களை ஆரம்பித்தபோது பெண்கள் பலர் இது பற்றித் தாம் அறிந்த விடயங்களையும் எம்முடன் பகிர்ந்து கொண்டனர். சிலர் இதனைப் பற்றித் தம்மிடம் விசாரிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொண்டனர். எது எவ்வாறாயினும் நடந்த பிரச்சினை பாரதூரமானதென்பதை அறிந்து கொள்ள எமக்கு சில ஆதாரங்கள் கிடைத்தன. அவற்றைக் கொண்டு நாம் சில விடயங்களில் மறைமுகமாகத் தகவல்களைத் திரட்ட ஆரம்பித்ததன் பின்னர் பெண்கள் முறையிடும் அளவு குறைந்தது. குறிப்பட்ட ஆடைத்தொழிற்சாலைகளில் பொதுவாகவே இந்தப் பிரச்சினை இருந்தாலும் சிலர் இது பற்றி முறையிட அவர்கள் தயக்கம் காட்டினர். இந்த விவகாரத்தை ஆராய்ந்து பார்த்தபோது இவ்வாறான சம்பவம் நடைபெற்றது உண்மை என்று அறிந்துகொண்டோம். இந்தத் தகவல் மெல்ல மெல்லக் கசிய ஆரம்பித்ததும் பணியாற்றும் பெண்களுக்குத் தம் கண் எதிரிலேயே அவற்றை உட்கொள்ளுமாறு ஆடைத்தொழிற்சாலைகள் நெருக்கடி கொடுக்க ஆரம்பித்திருந்தன என்பதையும் அறிந்து கொண்டோம். சில சட்ட வல்லுனர்களின் உதவியுடன் நாம் எமது செயற்பாடுகளை விஸ்தரித்திருந்தாலும் ஒவ்வொருவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் தேவையைப் புரிந்து கொண்டோம். பாலியல் இனப்பெருக்க சுகாதார உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு எமது ஒவ்வொரு திட்டத்திலும், கொள்கைகளிலும் ஏதாவது ஒரு வடிவில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் இன்றுவரை எமது நாட்டில் பெண்கள் தமது மாதாந்திர மாதவிடாய்க் காலங்களில் பெரிதும் உளரீதியாக அவர்களது குடும்பத்தினராலும் சமூகத்தினராலும் வேலைத்தளங்களிலும் ஏதோ ஒருவிதத்தில் பாதிப்புக்குட்படுத்தப்படுகின்றனர் என்பதற்கு இந்த ஒரு சம்பவம் உதாரணமாகும். இங்குதான் நாம் மாதவிடாய்க்கால வறுமை பற்றிய கூடிய அவதானத்தை செலுத்த ஆரம்பித்தோம்.

இந்த விடயத்தைப் பற்றி நாங்கள் அவதானத்தைச் செலுத்திய பிறகு இளையோர் குழுக்கள் தலைமையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள், மாதவிடாய்க்கால வறுமை பற்றிய கலந்துரையாடல்களிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன. மாதவிடாய் வறுமை என்பது பொருளாதார நிலைமையைப் பொறுத்து அவர்கள் தமக்கான மாதவிடாய்க் காலத்தில் பயன்படுத்தும் உற்பத்திப் பொருட்களைப் பெறுவதில் காணப்படும் இயலாமை நிலையை மையப்படுத்தியதாக இருக்கும். இந்த இடையீட்டின் பின்பே பெண்கள், சிறுமியர் என அடையாளப்படுத்தப்படும் மாதவிடாயை எதிர்கொள்வோர் மாதவிடாய்க் காலத்தில் தாங்கள் எதிர்நோக்கும் பாரபட்சமான நடத்தைகள் பற்றியும் தீட்டு என்று கூறி தம்மை விலக்கி வைக்கும் செயற்பாடுகள் பற்றியும் வெளிப்படையாகக் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தனர். இதன்படி பெண்கள் எதிர்நோக்கும் சமூகத்திற்கு வெளிப்படையாகத் தெரிய வராத பல பிரச்சினைகள் இருப்பதை நாங்கள் உணர்ந்தமையினால் இளையோரிடையே சமூக ஆய்வுகளை முன்னெடுக்க ஊக்குவித்துப் பயிற்சிகளினை அளித்திருந்தோம். அதில் பாடசாலை மாணவரிடையே பெண்களிடையே முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகியிருந்தன. மாணவியர் இடைவிலகல்கள் பதிவாகியுள்ளன.

**இலங்கையில் 30 சதவீதமான பெண்கள் மட்டுமே மாதவிடாய் காலத்தில் அணையாடைகளைப் பயன்படுத்துவதாக ஆய்வுகள் உறுதி செய்துள்ள நிலையில், இதற்கான காரணம் என்னவென்று கருதுகின்றீர்கள்?**

கொவிட் பிரச்சினையுடன் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சரிவுநிலையில் மாதவிடாய் அணையாடைகளுக்கான வரி அதிகரிக்கப்பட்டதால் அணையாடைகளின் விலைகளில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டது. இதனால் பெண்கள் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொண்டனர். குறிப்பாகப் பெண் பிள்ளைகள் மாதவிடாய்க் காலங்களில் பாடசாலை செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஏனெனில், மாதவிடாய் அணையாடைகளின் விலைகள் பிரச்சினைக்குரியதாக இருப்பதுடன், அவற்றை மாற்ற உரிய மலசலகூட வசதிகள் இன்மை மற்றுமொரு பிரச்சினையாகும். நாங்கள் இந்த விடயம் பற்றிய கலந்துரையாடல்களை இளைஞர் மட்டக் குழுக்களில் ஆரம்பித்தபோது, பல்வேறு தகவல்கள் வெளிவர ஆரம்பித்தன. வடமேல் மாகாணத்திலுள்ள சில பாடசாலைகளில் மாணவியர் தமது மாதவிடாய்க் காலங்களில் உரிய மலசலகூட வசதிகளின்றி துன்பப்படுவதை அவர்களுடனான சந்திப்புகளின்போது அறிய முடிந்தது. அதிலும் கொடூரம் அவர்கள் தமது அணையாடைகளைத் தொடர்ந்து மாற்றாமல் அணிந்துகொண்டிருப்பதால் தொற்றுகள் ஏற்பட்டு அடுத்த சில நாட்கள் பாடசாலைக்குச் சமுகமளிக்க முடியாமலிக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு மாதமும் இடம்பெற்றால் அவர்களது கல்வியின் நிலைமை என்னாவது?

இதில் பிரதானமாக மாதவிடாய் அணையாடையாகத் துணிகள் பரவலாகப் பயன்படுத்தப்படும் விடயம் வெளியாகியது. மாதவிடாய்க் காலத்தில் கடைகளில் விற்கப்படும் அணையாடைகளைக் கொள்வனவு செய்வது மிகவும் குறைவாக உள்ள விடயமும் அதற்குப் பணப் பற்றாக்குறை முக்கிய விடயம் என்பதும் அடையாளம் காணப்பட்டன. மற்றும் அது பற்றிய அறிவும் விழிப்புணர்வும் பெண்கள் மத்தியில் பெருமளவில் இல்லாத நிலையே உள்ளது.

குறிப்பாக பாடசாலை மட்டத்தில் பெண் பிள்ளைகள் மத்தியில் மிகவும் குறைவான அறிவே உள்ளது. இதனால் பாடசாலை மட்ட விழிப்புணர்வை நாங்கள் முன்னெடுத்தோம். இந்த அறிவின்மையால் துஷ்பிரயோகங்கள் அதிகளவில் நடைபெறுகின்றன.

(08 ஆம் பக்கம் பார்க்க...)

## நக்கல் நமசிவாயம்

போராட்டம் செய்தா அடிப்போம் எண்டு சொன்ன இதே ரணில்தான் 'கோட்டா கோ ஹோம்' போராட்டம் தொடர்ந்து நடக்கட்டும் எண்டு ஊக்குவிச்சவர்... நினைவிருக்குதோ..?



## தவக்கால சிந்தனை



### அவருக்கு மரண தண்டனை விதிப்பார்கள்

அக்காலத்தில் இயேசு எருசலேமை நோக்கிச் செல்லும் வழியில் பன்னிரு சீடரையும் தனியே அழைத்து, "இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிட மகன் தலைமை குருக்களிடமும் மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதிப்பார்கள். அவர்கள் அவரை ஏளனம் செய்து, சாட்டையால் அடித்து, சிலுவையில் அறையும்படி பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். ஆனால், அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்" என்று அவர்களிடம் கூறினார்.

பின்பு செபதேயுவின் மனைவி தம் மக்களோடு ஒரு வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார். "உமக்கு என்ன வேண்டும்?" என்று இயேசு அவரிடம் கேட்டார். அவர், "நீர் ஆட்சி புரியும்போது என் மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச் செய்யும்" என்று வேண்டினார். அதற்கு இயேசு, "நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப்போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?" என்று கேட்டார். அவர்கள் "எங்களால் இயலும்" என்றார்கள். அவர் அவர்களை நோக்கி, "ஆம், என் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள். ஆனால், என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவது எனது செயலல்ல. மாறாக அவ்விடங்களை என் தந்தையாருக்கு யார் ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அவை அருளப்படும்" என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பத்துப்பேரும் அச்சகோதரர் இருவர் மீதும் கோபம் கொண்டனர். இயேசு அவர்களை வரவழைத்து, "பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடிமக்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். இதை நீங்கள் அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராக இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிடமகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" என்று கூறினார்.

# இலங்கைக்கு கடத்த முற்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுடன் இருவர் கைது



(மன்னார் நகர் நிருபர்)

கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைத்திருந்த பல இலட்சம் ரூபா மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகள், அழகு சாதனப் பொருட்களை மெரைன் பொலிஸார் நேற்று (7) காலை பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக 2 பேரை கைதுசெய்து விசாரித்து வருகின்றனர். மெரைன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த கைது இடம்பெற்றது.

கோப்பேரிமடம் சோதனைச்சாவடியில் வாகன சோதனை மேற்கொண்டதில் சரக்கு வாகனமொன்றில் இருந்த 20 மூடைகளைப் பிரித்துப் பார்த்தனர்.

450 கிலோ பூச்சிக்கொல்லி மருந்துகள், 125 கிலோ அழகுசாதனப் பொருட்கள், கைக்கடிகாரம், பென்ஸி பொருட்கள் இருந்தன.

அவற்றை எடுத்துச்செல்வதற்கான எவ்வித ஆவணங்களும் இல்லை. இது குறித்து வாகனத்தில் இருந்த 2 பேரிடம் நடத்திய விசாரணையில் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தனர். இருவரையும் மெரைன் பொலிஸ் நிலையம் அழைத்து வந்தனர்.

பின்னர் அவர்களிடம் நடத்திய விசாரணையில், சரக்கு வாகனத்தில் கொண்டுவந்த பொருட்களை கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக ஏற்றி வந்தமை தெரிந்தது.

அதைத் தொடர்ந்து கைதுசெய்யப்பபட்ட இருவருடன், சரக்கு வாகனம் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களையும் இராமநாதபுரம் சுங்கத்துறையினரிடம் மெரைன் பொலிஸார் ஒப்படைத்தனர்.

# பெல்வத்த – செவனகல மதுபான ஆலைகளில் விற்க முடியாது 1700 மி.லீ. எத்தனோல் தேக்கம்





(கெலும் குணதிலக்க)

இலங்கை சீனி கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான பெல்வத்த மற்றும் செவனகல சீனி தொழிற்சாலைகளின் கீழ் அமைந்துள்ள மதுபான ஆலைகளில் உற்பத்திசெய்யப்பட்ட 17 மில்லியன் லீற்றர் எத்தனோல் விற்பனை செய்ய முடியாமல் தொட்டிகளில் தேக்கிவைக்கப்பட்டுள்ளதாக இலங்கை சீனி கூட்டுத்தாபனத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பெல்வத்த மதுபான ஆலையில் 9 இலட்சம் லீற்றரும், செவநகல மதுபான ஆலையில் 8 இலட்சம் லீற்றரும் இவ்வாறு விற்பனை செய்யமுடியாது தேங்கியுள்ளன. இந்த எத்தனோலின் மதிப்பு சுமார் 204 கோடி ரூபா என தெரிவிக்கப்படுகிறது.

எத்தனோல் ஒரு லீற்றர் 1200 ரூபாவுக்கு இலங்கை சீனி கூட்டுத்தாபனம் விற்பனை செய்கிறது. இந்நிலையில், மதுபானங்களின் விலை அதிகரிப்பு, போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, வரி அதிகரிப்பு, சோளத்திலிருந்து எத்தனோல் உற்பத்தி போன்ற காரணங்களால் இலங்கை சீனி கூட்டுத்தாபனத்திடமிருந்து எத்தனோலை கொள்வனவு செய்வதற்கு கொள்வனவாளர்கள் தயாராக இல்லையென தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை சீனி கூட்டுத்தாபனத்தின் பெல்வத்த தொழிற்சாலையின் பிரதம நிறைவேற்று அதிகாரி சமன் அமரகோன் தெரிவிக்கையில்,

இலங்கை சீனி கூட்டுத்தாபனம் பெல்வத்த மற்றும் செவனகல மதுபான ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட எத்தனோலை விற்பனை செய்து பெருமளவு வருமானத்தை ஈட்டி வந்தது. தற்போது பல்வேறு காரணங்களால் எத்தனோல் வாங்குவதற்கு கொள்வனவாளர்கள் குறைவாக வருவதால் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் இலங்கை சீனி கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி எத்தனோல் ஒரு லீற்றரின் விற்பனை விலையை 1,200 ரூபாவிலிருந்து குறைத்து 1,000 ரூபாவுக்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது - என்றார்.

# தெற்கு வான்கூவர் தீவுகளிலுள்ள பறவையினங்கள் யாழுக்கு வருகை





காலநிலை மாற்றம் காரணமாக புலம்பெயர்ந்து இருக்கும் தெற்கு வான்கூவர் தீவுகளிலுள்ள பறவையினங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தீவகக் கடற்கரையிலும் அதிகமாக வருகின்றன.

அந்தவகையில் யாழ். அராலி மற்றும் மண்கும்பான், ஊர்காவற்றுறையிலுள்ள கடற்கரைகளிலும் இப்பறவையினம் வருவதைக் காணமுடிகின்றது.

குறிப்பாக இந்தப் பறவையினம் குடும்பமான குழுக்களாக பங்குனி மாதங்களில் வருவதைக் காணமுடிகின்றது.

இது கண்களுக்கு காட்சி அளிக்கும் விதம் ஓர் அற்புதமாக காணப்படுகின்றது.

எல்லா விலங்குகளும் பறவைகளும் வெப்பநிலை வேறுபாட்டை உள்ளூர உணர்கின்றன. மேலும் மனிதனைப்போலவே, விலங்கினங்கள் கோடைக்காலத்தைக் குளிர்ந்த இடங்களிலும், குளிர்காலத்தை வெதுவெதுப்பான இடங்களிலும் கழிக்க விரைகின்றன. அவை தங்கள் வாழிடத்தைப் பல்வேறு பருவ காலங்களில் மாற்றிக் கொள்கின்றன. குறிப்பிட்ட காலங்களில் விலங்குகள் அல்லது பறவைகள் தங்களின் வாழிடத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட காரணங்களுக்காக இடப்பெயர்வு செய்கின்றன.

அந்தவகையில் தெற்கு வான்கூவர் தீவுகளிலுள்ள பறவையினங்களை யாழ்ப்பாணத்திலுள்ள தீவகக் கடற்கரையில் அதிகமாகக் காணமுடிகின்றது.

# ரஷ்யப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு



மாத்தறை, ஹுங்கம, கஹந்தமோதர கடற்பகுதியில் ரஷ்யப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஹுங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஹந்த மோதர முகத்துவாரத்திற்கு அருகிலுள்ள கடற்கரையில் பயணித்த மூன்று ரஷ்யர்களில் ஒருவர் முகத்துவாரத்தில் இறங்கிய பின்னர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக விடுதி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

ரஷ்யப் பிரஜையான செர்பினன் பெட்ஸி என்ற 44 வயதுடைய நபரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இந்த ரஷ்ய நாட்டவர் கஹந்த மோதர பிரதேசத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக தனது சகோதரருடன் வசித்து வந்ததாகவும், தனது சகோதரனுடனும் மற்றுமொரு ரஷ்யப் பெண்ணுடனும் கடற்கரையில் நடந்து சென்றபோதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பஸ் விபத்தில் ஒருவர் பலி!



கொழும்பு - கண்டி பிரதான வீதியில் மாவனல்லை - கணேதன்ன பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 23 பேர் காயங்களுடன் மாவனல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் ஒன்றும், நீர்கொழும்பிலிருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. சம்பவத்தில் மீரிகம பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார். காயமடைந்தவர்களில் இரு பஸ்களின் சாரதிகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவனல்லை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா பாடசாலை அதிபருக்கு பிரியாவிடை



(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை, சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி கொழும்பு ஹமீத் அல்-ஹுஸைனி தேசிய பாடசாலைக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் எம்.ஆர்.எம்.றிஸ்கிக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வு பாடசாலை எஸ்.எம்.ஜாபிர் ஹாஜியார் மண்டபத்தில் நடைபெற்றது.

11 வருடங்களாக அதிபராக இருந்து ஆற்றிய மகத்தான சேவையை நினைவுகூர்ந்து சீனன்கோட்டை பள்ளிச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் சார்பில் நினைவுச்சின்னங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

இலங்கையில் புகழ்பெற்ற நாட்டுக்கும் சமூகத்திற்கும் பல புத்திஜீவிகளை உருவாக்கிய சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலையின் கல்வி, விளையாட்டுத்துறை உட்பட பல துறைகளைக் கட்டியெழுப்ப அதிபர் எம்.ஆர்.எம்.றிஸ்கி ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஆற்றிய அழியா சேவைகளை இந்நிகழ்வில் பலரும் பாராட்டிப் பேசினர்.

# அம்பாறை, நாவிதன்வெளி பிரதேச மக்களுக்கு குடிநீர் வசதியைப் பெற்றுக்கொடுத்த ஜீவன்





தமது கோரிக்கையை ஏற்று, குடிநீர் வசதியை பெற்றுக்கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கு அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அன்னமலை-01, அன்னமலை-02, நாவிதன்வெளி-01, சவளக்கடை, சாளம்பைக்கேணி-03, சாளம்பைக்கேணி-04, மத்திய முகாம்-01 உட்பட 12 கிராமசேவகர் பிரிவுகளில் வீதிகளுக்கு நீர்விநியோகக் குழாய்கள் பொருத்தப்படாததால் மக்கள் குடிநீரைப் பெறுவதில் நெருக்கடியை எதிர்கொண்டனர்.

இந்நிலையில், மக்களின் சார்பில், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரான தி.யோகநாயகன், அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு கோரிக்கை கடிதமொன்றை அனுப் வைத்திருந்தார்.

இக்கடிதம் கிடைத்த கையோடு, மக்களின் பிரச்சினை உடன் தீர்க்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆலோசனை வழங்கினார்.

இதற்கமைய தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகளால், நீர்விநியோகக் குழாய்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காகவே மக்களும், குறித்த பிரதேச சபை உறுப்பினரும் அமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளதுடன், அவரின் சேவை நாட்டுக்கு தேவையென வாழ்த்தும் தெரிவித்துள்ளனர்.

# தம்பகல்ல பகுதி வீடொன்றில் தங்க நகை – பணம் கொள்ளை

தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுலுவெல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தங்க நகைகள் மற்றும் பணம் திருடப்பட்டுள்ளதாக தம்பகல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

87 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பணம் மற்றும் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ள பெண் தனது இரண்டு குழந்தைகளுடன் ஆலயத்துக்குச் சென்று இரவு வீடு திரும்பியுள்ளார். இதன்போது வீட்டின் கதவு முன்னதாகவே திறக்கப்பட்டிருந்தது. வீட்டை சோதனையிட்டபோது பணமும் நகையும் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இது தொடர்பான விசாரணைகளை தம்பகல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செலான் வங்கி பீ.எல்.சி.

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி) - கம்புருபிடிய கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

கம்புருபிடிய வர்த்தகப் பதிவு இலக்கம்ஐ/5/4613 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட "எகோ வென்டிலேட்டர்களஸ்" என்ற கீர்த்தி நாமத்தில் மற்றும் பாணியின் கீழ் ஒரு தனி உரிமையாளராக வியாபாரமாக நடத்திக்கொண்டு இருக்கும் கம்புருபிடியவில் வசிக்கும் லசித அவந்த லியனபத்திரன என்பவர் கடப்பாடுடையவராகவும் / ஈடுவைத்தவராகவும் என்ற வகையில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு W.O.S விதானந்தா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2016.10.10ஆம் திகதியிடப்பட்ட 1442ஆம் இலக்க ஈட்டுமுறி, 2016.11.28ஆம் திகதியிடப்பட்ட 1460ஆம் இலக்க ஈட்டுமுறி, 2017.02.27ஆம் திகதியிடப்பட்ட 1504ஆம் இலக்க ஈட்டுமுறி, 2017.07.13ஆம் திகதியிடப்பட்ட 1544ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது செலான் வங்கி பீ.எல்.சி யில் அடகுவைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூழலானது,

**2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி மு.ப 11.15 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள வங்கியின் வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சின் கொவிட் 19 நெறிமுறைகளை பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டலுக்கு ஏற்ப நடாத்தப்படும்.

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், கங்கபட பத்துவே, கம்புருபிடிய பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதேச சபை எல்லைக்குள், 331 ஏ அகுருகொட கிராம சேவகர் பிரிவிற்குள், கஹாகல மற்றும் அகுருகொட கிராமத்தில் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் சி. ரங்கோடகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.12.24ஆம் திகதியிடப்பட்ட 577ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படேவத்த லொட் 4இன் அருகில் லொட் 4 ஏ மற்றும் லொட் பி என்று குறிப்பிடப்பட்ட காணி லொட் ஏ என அடையாளமிடப்பட்ட காணி, கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துடனும் பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு மூன்று றூட் ஆறு தசம் பூச்சியம் எட்டு பேர்ச்சஸ் (ஏ.0 றூ3. பே6. 08) விஸ்தீரணமான காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** பிரதான பஸ்கள் நிறுத்தும் இடத்தில் இருந்து மாத்தறையை நோக்கி 4.9 KM தூரம் சென்ற பிறகு இடது பக்கத்தில் உள்ள கஹகல வீதி வரை சென்று அந்த வீதியில் 250 மீற்றர் வரை சென்ற பிறகு இடது பக்கத்தில் இந்த விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2023.01.27ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2023.02.01ஆம் திகதி அத, டெய்லி மிரர் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:-** உத்தே கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% (2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% (4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 3,000/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.
பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி.,
இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கங்கள்: 011-2456478, 011-2456473

**★ எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.**

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பீட்டாளர் மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி இலக்கம்: 071 4318252

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிற்றுக்கிழமை 2023.03.06
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5051
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,301,792.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 6 1 2 1 5 1

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3293
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,327,175.60
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 04 48 63 64

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 1506
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,281,168.80
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 1 0 4 9 0 9

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1081
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,114,454.40
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 18 19 25 72

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 360
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,020,604,20
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 08 18 19 36 விசேட இலக்கினம் மீனம்

**மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1399
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 305,941,874.00
ஆங்கில எழுத்து B சுப்பர் இலக்கம் 03 வெற்றி இலக்கங்கள் 02 21 44 54
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# சுற்றுலாத்துறை மூலம் நாட்டுக்கு 330 மில்லியன் அமெ.டொலர் வருமானம்

இந்த வருடத்தின் கடந்த இரண்டு மாதங்களில் சுற்றுலாத்துறை மூலம் 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளன.

கடந்த மாதம் மட்டும் 170 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக வருடத்தின் முதல் இரு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டியுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 07.03.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 102 43 1 | 116 8428 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 34 1722 | 37 8202 |
| யூரோ | 228 633 | 248 8160 |
| ஜப்பான் யென் | 1 230 | 1 37 0 |
| ஐ.அ.டொலர் | 207 2 40 | 224 64 1 |
| ஸ்ரேலிங் பவுன் | 271 7 26 | 3 4 1854 |

# கொட்டகலைக்கு விரைவில் தீயணைப்பு வாகனம்

## இராதா எம்.பி உறுதி

(ஆ.ரமேஸ்)

கொட்டகலை பகுதிக்கு விரைவில் தீயணைப்பு கருவிகள் உட்பட தீயணைப்பு வாகனமொன்றினை ஜப்பான் அரசாங்கத்தின் உதவியோடு வழங்குவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களை நேற்றுமுன்தினம் மாலை பார்வையிட்ட பின் அங்கு கூடியிருந்த மக்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களிடம் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான தூதுவரை அடுத்த வாரம் சந்தித்து



கலந்துரையாடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அச்சந்தர்ப்பத்தில் இவ்விடயத்தையும் முன்வைத்து கொட்டகலை பகுதிக்கு விரைவில் ஜப்பான் அரசாங்கத்தின் உதவியோடு தீயணைப்பு கருவிகளையும் தீயணைப்பு வாகனத்தையும் பெற்றுத்தருவதாக கூறியதோடு பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களுக்குத் தேவையான உதவிகளை பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

மேலும், தீப்பரவல் ஏனைய கடைகளுக்கு பரவாமல் தீயணைப்பை கட்டுப்படுத்த விரைந்து உதவிய அப்பகுதி இளைஞர்களுக்கும் ஐக்கிய வர்த்தக சங்கத்திற்கும் நன்றியையும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாப் பயணியிடமிருந்து கைபேசியை திருடியவர் கைது

(கண்டி செய்தியாளர்)

இலங்கைக்கு சுற்றுலாவில் வருகைதந்த இத்தாலி நாட்டு இளம் பெண் வைத்தியர் ஒருவரது சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட கையடக்கத் தொலைபேசியை களவாடியதாக சந்தேகிக்கப்படும் முச்சக்கர வண்டிச்சாரதி ஒருவர் கண்டியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து காணாமல்போன கையடக்கத் தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளது.

கண்டிக்கு வருகை தந்த இளம் பெண் வைத்தியர் ஒருவர் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முச்சக்கரவண்டி ஒன்றில் சென்றுள்ளார். முச்சக்கரவண்டி சாரதியை தாமதிக்கும்படி கூறிச் சென்றுள்ளார். அவ்வேளை மறதியாக தனது தொலைபேசியையும் முச்சக்கரவண்டியில் விட்டுச் சென்றுள்ளார்.

அவர் திரும்பி வந்து பார்த்தபோது முச்சக்கரவண்டியைக் காணவில்லை. அப்போதுதான் தனது கையடக்கத் தொலைபேசியும் தொலைந்துள்ளதை அறிந்து கண்டி சுற்றுலா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்படி, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின்பேரில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதன்படி, சந்தேக நபர் கையடக்கத் தொலைபேசியை திருடியுள்ளமை தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவர்கள் சிலரையும் விரிவுரையாளர்கள் இருவரையும் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலை அறையில் அடைத்து வைத்து உளரீதியாக தாக்கத்தை ஏற்படுத்திய 10 மாணவர்களை பலாங்கொடை சமனலவெவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் பல்கலை நிர்வாகம் சமனலவெவ பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் நடத்திய விசாரணைகளில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு இணங்க இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவர்கள் தொடந்துவ, கெப்பித்தி கொல்லாவ, உஸ்வெட்டிகொய்யாவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கு அமைவாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரனால் கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட கைப்புகலை, ஹெரோ ஆகிய தோட்ட ஆலயங்களுக்கு காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன. (தலவாக்கலை செய்தியாளர்)



பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மாசி மக சிறப்பு பூஜை வழிபாடுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. (படப்பிடிப்பு: என். மலர்வேந்தன்)

# ஹட்டன் டிப்போவுக்கு ரூ.135 இலட்சம் இலாபம்



சிவனொளிபாத மலை யாத்திரை காரணமாக கடந்த வார இறுதியில் மாத்திரம் ஹட்டன் டிப்போவுக்கு 135 இலட்ச ரூபா இலாபம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஹட்டன் டிப்போ முகாமையாளர் டபிள்யூ.ஜீ.கீர்த்திரத்ன தகவல் வெளியிடுகையில், வார இறுதி நாட்களுடன் திங்கட்கிழமை போயா தினம் என்பதால் சிவனொளிபாத மலைக்கு வரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டது. அதனால் ஹட்டன் டிப்போவுக்கு 135 இலட்ச ரூபா இலாபம் கிடைக்கப்பெற்றுள்ளது.

யாத்திரை வரும் மக்களுக்காக நாம் சிறப்பான போக்குவரத்துச் சேவையை வழங்கி வருகிறோம். இவ்வாறான பெருந்தொகை இலாபத்தைப் பெற்றுக்கொள்ள எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பு மிகப் பிரதான காரணமாகும் எனத் தெரிவித்தார்.

# வடமராட்சியில் மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு



(நெல்லியடி நிருபர்)

மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் (06) வடமராட்சி, கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது, மாமனிதர் கிட்ணன் சிவநேசனின் புதல்வி தாட்சாயிணி சிவநேசன் ஈகைச்சுடரை ஏற்றியதுடன், அவரது திருவுருவப் படத்துக்கு மாமனிதரின் புதல்விகள் மலர்மாலை அணிவித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க.சுகாஸ் மற்றும் உறவுகள், ஆதரவாளர்கள் உட்பட பலரும் மலர் அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தலில் நினைவுரைகள் இடம்பெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக கிட்டினன் சிவநேசன் சேவையாற்றிவந்த காலத்தில் 2008ஆம் ஆண்டு இதே நாளில், மாங்குளம் குஞ்சுக்குளம் பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா ஆழ ஊடுருவும் படையணியினரின் கிளைமோர்த் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், உறவுகள், மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல்

# வடமாகாண ரீதியாக அனைத்து செயல்பாடுகளையும் முடக்கி போராட்டம் முன்னெடுப்பதற்குத் தீர்மானம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் தீவுப் பகுதியில் அமைக்கப்படவுள்ள 2ஆம் கட்ட காற்றாலை மின்சாரம் தொடர்பாக எதிர்ப்பு நடவடிக்கைகள் வலுபெற்றுவரும் நிலையில் குறிப்பாக, இரண்டாம் கட்ட காற்றாலை மின்சாரம் அமைத்தல் அதானி குழுமத்திற்கு திட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (06) மாலை பிரஜைகள் குழு அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர், பொது அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகள் ஒன்றுகூடி கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இதன்போது சட்ட நடவடிக்கைகள் மற்றும் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், தீவுப் பகுதி மக்களிடமும் பல்வேறு அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமும் கையெழுத்து பெறப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் சர்வதேச ரீதியிலும் அனுப்பிவைக்கப்பட உள்ளதாக குறித்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின்சாரம் அமைப்பது தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழு மற்றும் பொது அமைப்புகள் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் சந்தர்ப்பத்தில் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஊடாக மன்னார் மாவட்ட பகுதி மக்களிடம் இரண்டாம் கட்ட காற்றாலை மின்சாரம் அமைப்பதற்கான சுற்றுப்புறச் சூழல் தொடர்பான அறிக்கைகள் மக்களிடமிருந்து அரசாங்கம் கோரி இருப்பதற்கு அமைவாக குறித்த அறிக்கை ஏப்ரல் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கும்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தீவுப் பகுதியிலுள்ள பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளிடமிருந்து பெறப்படும் கையெழுத்துப் பிரதிகள் குறித்த தரப்பினரிடம் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன் பெறப்பட்டு அனுப்பிவைக்கப்படவுள்ளதுடன், முன்னெடுக் கப்படும் சட்ட நடவடிக்கைக்கும் சர்வதேச நடவடிக்கைகளுக்கும் குறித்த கையெழுத்துப் பிரதிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையால் மாவட்ட பகுதி மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்ல முடியாமல் நஷ்டத்தை எதிர்நோக்குவது குறித்து குறித்த கூட்டத்தில் பேசப்பட்டு பாரியளவிலான மாவட்ட ரீதியாகவும் வடமாகாண ரீதியாகவும் அனைத்து செயல்பாடுகளையும் முடக்கி போராட்டம் முன்னெடுப்பதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது

(யாழ். நிருபர்)

அச்சுவேலி நகரில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் அச்சுவேலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இரு குழுக்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவி வந்த முரண்பாடு காரணமாக அச்சுவேலி - மகிழடி வைரவர் கோவிலடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இளைஞன் ஒருவன் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பாரதி வீதி பத்தமேனியைச் சேர்ந்த 27 வயதான இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்த அச்சுவேலி பொலிஸார், குட்டியப்புலம் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், மேலும் சிலரை கைதுசெய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வைரவர் ஆலயத்தில் சூலத்தைக் கட்டிப்பிடித்தபடி குரங்கு மரணம்

## கொடிகாமத்தில் சம்பவம்



(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் - கச்சாய் தெற்குப் பகுதியில் உள்ள பாதாள வைரவர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த சூலத்தை கட்டிப் பிடித்தபடி குரங்கு ஒன்று மரணமடைந்திருப்பது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை ஆலயத்தில் நின்ற புளியமரத்தின் கீழே வைக்கப்பட்டிருந்த சூலத்தை பிடித்தவாறு குரங்கு ஒன்று உயிரிழந்த நிலையில், காணப்பட்டுள்ளது.

இருப்பினும் குரங்கினுடைய உடலில் காயங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை எனவும் சூலத்தை பிடித்தவாறு உயிரிழக்கக் காரணம் என்னவென தெரியவில்லை எனவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

# கொடிகாமத்தில் பெண்ணொருவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் பகுதியில் தனிமையில் இருந்த பெண் ஒருவர் திங்கட்கிழமை(06) காலை வீட்டுக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 62 வயதான சரோஜாதேவி என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அயல் கிராமத்தில் வசிக்கும் குறித்த பெண்ணுடைய மகன் தாயாருக்கு வழமை போன்று உணவெடுத்து வந்தபோதே தாயார் கிணற்றில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# குறைந்த வருமானம் பெறுவோர் - கலைஞர்களுக்கு 1,996 வீடுகள் நிர்மாணிக்க சீனாவுடன் ஒப்பந்தம்



குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் கலைஞர்களுக்கு 1,996 வீடுகளை நிர்மாணிக்க சீனாவுடனான ஒப்பந்தம் அடுத்த சில வாரங்களில் செய்து முடிக்கப்படுமென நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இது தொடர்பான அடிப்படைத் திட்டங்கள் ஏற்கனவே வரையப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று அந்த அதிகாரசபை கூறியது.

இதற்கான ஆரம்ப ஒப்பந்தம் அண்மையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையில் கைச்சாத்திடப்பட்டது. சீன அரசாங்கத்தின் சார்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் மற்றும் சீன அரசாங்கத்தின் மத்திய தெற்கு கட்டடக்கலை வடிவமைப்பு நிறுவனகட கூட்டுத்தாபனத்தின் செயலாளர் ஷென் தாவோ ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனையிபேரில் இந்த வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அமைச்சரின் முயற்சியின் கீழ், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு அதற்கான திட்டங்களைத் தயாரித்து வருகிறது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 1,996 வீடுகளை நிர்மாணிப்பதற்காக சீன அரசாங்கம் 552 மில்லியன் யுவான் (29 பில்லியன் ரூபா) உதவியை வழங்கவுள்ளது. இந்த வீட்டுத் திட்டங்கள் 5 இடங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளன. அதற்காக பேலியகொட, தெமட்டகொட, கொட்டாவ, மஹரகம, மொரட்டுவ ஆகிய நகரப் பகுதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த 5 வீட்டுத் திட்டங்களில் கொட்டாவ வீடமைப்புத் திட்டம் நாட்டின் மூத்த கலைஞர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை 108 ஆகும். ஒரு வீட்டின் அளவு 750 சதுர அடி. மற்ற 4 திட்டங்களும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட்டு, கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை 1,888 ஆகும். இங்கு ஒரு வீடு 530 சதுர அடிகளைக்கொண்டது. இவ்வருட இறுதிக்குள் இங்கு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதி பணிப்பாளர் நாயகம் ஈ.ஏ.சி.பிரியசாந்த, மேலதிக திட்டப் பணிப்பாளர் நிஹால் திஸாநாயக்க மற்றும் அதிகாரிகள் குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கிராமிய ரீதியில் அடித்தளம் இடுவதனூடாக தேசிய மட்ட விளையாட்டை உயர்த்த முடியும்

## விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க



(கண்டி நிருபர்)

தேசிய மட்டத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கவேண்டுமாயின் கிராமிய ரீதியில் சரியான அடித்தளம் இடப்பட வேண்டும் என்று மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சருமான ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை, மானம்பொட என்ற இடத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

உக்குவளை பிரதேசத்தில் இயங்கும் 'ரேஞ்சர்ஸ்' விளையாட்டுக் கழகத்தில் மைதான அபிவிருத்தி தொடர்பான மேற்பார்வைக்காக அவர் நேரடி விஜயம் செய்தபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

தேசிய மட்டத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கவேண்டுமாயின் கிராமிய ரீதியில் சரியான அடித்தளம் இடப்பட வேண்டும், எனவே, அதற்குத் தேவையான மைதான வசதிகள், பயிற்சி மற்றும் உபகரணங்கள் போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்குவதன் ஊடாக அடிமட்ட அபிவிருத்தியை ஏற்படுத்தி, தேசிய மட்ட அபிவிருத்தியை அடையமுடியும் - என்றார்.

அந்த அடிப்படையிலே அதற்குத் தேவையான அடித்தளமிடப்படவே இத்தகைய நடவடிக்கைகளை மேறகொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கொழும்பு -13, கொட்டாஞ்சேனை சிங்கள ஜூனியர் வித்தியாலயத்தின் இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி பாடசாலையின் அதிபர் திருமதி சீயானி ரம்லதா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது, இதில் பிரதம அதிதியாக கொழும்பு பிராந்திய ஆரம்ப கல்விப் பணிப்பாளர் திருமதி ஷ்யாமா பெரேரா மற்றும் மத்திய கொழும்பு மாவட்ட கல்விப் பணிப்பாளர் ரஞ்சித் பிரேமதிலக்க ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள் மொஹமட் நசார்)

# 'ஹரக் கட்டா' – 'குடு சலிந்து' மடகஸ்காரில் கைது



தலைமறைவாகியிருந்த போதைப்பொருள் வர்த்தகர்களான 'ஹரக் கட்டா' என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்ன மற்றும் 'குடு சலிந்து' என்ற சலிந்து மல்ஷித குணரத்ன உள்ளிட்ட 8 பேர் மடகஸ்காரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மடகஸ்காரின் முன்னணி ஊடக வலையமைப்பான L'EXPRESS இணையதளம் நேற்று முன்தினம் (6) இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த 8 பேரும் மடகஸ்காரிலுள்ள இவாட்டோ (Ivato) சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் ஹரக் கட்டாவின் மனைவி என்று கூறப்படும் மலகாசியரான பெண்ணொருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதள அறிக்கையின்படி, கடந்த மார்ச் முதலாம் திகதி ஹரக் கட்டா உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஏனைய ஐந்து பேர் கடந்த பெப்ரவரி 12ஆம் திகதியன்று நாட்டின் Nosy Be சர்வதேச விமான நிலையத்திற்கு ஒரு தனியார் ஜெட் விமானத்தில் வந்துள்ளனர் என்றும் அவர்கள் கடந்த மார்ச் முதலாம் திகதி மடகஸ்காரை விட்டு வெளியேறும்போது கைதுசெய்யப்பட்டதாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்டபோது, ஹரக் கட்டா தன்னையொரு கோடீஸ்வர தொழிலதிபர் போல் காட்டிக்கொண்டதாகவும், குடு சலிந்து உட்பட ஏனைய குழுவினர் ஹரக் கட்டாவின் மெய்ப்பாதுகாவலராக தோன்றியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நீதிமன்றங்களால் பெறப்பட்ட பிடியாணைகள் மற்றும் பொலிஸ் அறிக்கைகளின் பிரகாரம், ஹரக் கட்டா உள்ளிட்ட பாதாள உலக உறுப்பினர்களுக்கு எதிராக இன்டர்போல் சிவப்பு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

சர்வதேச பொலிஸின் சிவப்பு அறிவிப்பின்படி, ஹரக் கட்டா மட்டும் மடகஸ்கார் பாதுகாப்புப் படையினரால் தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளார். விசாரணைகளின் மூலம் குடு சலிந்து அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹரக் கட்டா மற்றும் பலர் தாங்கள் தங்கியிருந்த விடுதியிலிருந்து இரண்டு சொகுசு கார்களில் இவாடோ விமான நிலையத்திற்கு பிரவேசித்ததாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹரக் கட்டாவின் மனைவியெனக் கூறப்படும் பெண்ணிடமிருந்து அந்நாட்டின் நாணய பெறுமதியிலான 38 மில்லியனுக்கும் அதிகமான பணத்தை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

துபாய், மலேசியா, சிங்கப்பூர், சீஷெல்ஸ், மாலைதீவு மற்றும் மடகஸ்கார் ஆகிய நாடுகளில் ஹரக் கட்டா போதைப்பொருள் விநியோகம் செய்வதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹரக் கட்டா உள்ளிட்டோர் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளதாக அந்நாட்டு ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு மாவட்ட கால்நடைகளின் நோய் நிலைமை அடையாளம்

## உடனடியாக ஆராயுமாறு விவசாய அமைச்சர் பணிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தோல் கட்டி நோயே (Lumpy Skin Disease) பரவி வருவதாக விவசாய அமைச்சின் கால்நடைப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்நாட்களில் கால்நடைகளுக்குப் பரவிவரும் நோயாக தோல் கட்டி நோய் (Lumpy Skin Disease - LSD) என விவசாய அமைச்சின் கால்நடை அபிவிருத்திப் பிரிவு வலியுறுத்துகிறது.

இந்த நோய் நிலைமையை உடனடியாக ஆராயுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கால்நடை அபிவிருத்திப் பிரிவுக்கு நேற்று (07) பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான தகவல்களை விளக்கிய கால்நடை அபிவிருத்திப் பிரிவின் செயலாளர் டாக்டர் எல்.டபிள்யூ.என்.சமரநாயக்க, 2019ஆம் ஆண்டு இலங்கையில் முதன்முறையாக இந்த நோய் நிலை பதிவாகியுள்ளதாகவும் அதற்கு முன்னர் இந்நாட்டில் இந்த நோய் நிலை பதிவாகவில்லை என்றும் குறிப்பிட்டார்.




**Sales Executive**
Company: Nimbus Venture
Email: career@nimbusventure.com

**Senior Accountant**
Company: Lassana.com
Email: careers@lassanaflora.com

**Human Resource Manager**
Company: Colombo Lotus Tower
Email: hrexec@colombolotustower.lk

**Billing Clerk**
Company: Harith Engineering & Company PVT Ltd
Email: harith.eng@yahoo.com

**Digital Sales/Marketing Executive (Female)**
Company: KDG Global
Industry: Gem and Jewellery
Email: careers@kdgglobal.com

**Lecturers for Diploma in English**
Institution: BIMT Campus
Email: info@bimt.lk


**Social Media Specialist**
Company: Park Street Mews
Email: info@parkstreetmews.com

**Senior Sales Executive**
Company: Tudawe Trading Company PVT Ltd
Email: itsyouwewant@tudawetrading.com
Front Office Executive
Company: Pet Veterinary Services PVT Ltd
Location: Colombo
Email: careers@petvet.lk

**Creative Designer**
Company: Club House Vivaldi
Email: accounts@clubhousevivaldi.com

**System Engineer**
Company: Mobizz Elite PVT Ltd.
Email: asath@mibizz.lk

# முச்சக்கரவண்டி திருடிய ஐவர் கைது



பொரலஸ்கமுவ பிரதேசத்தில் முச்சக்கரவண்டியொன்று திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டி திருட்டு தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொரலஸ்கமுவ பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் சந்தேகநபர்கள் ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, சந்தேகநபர்களால் முன்னர் திருடப்பட்ட 03 முச்சக்கரவண்டிகளை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

சந்தேகநபர்கள் 23 வயதுக்கும் 32 வயதுக்கும் இடைப்பட்ட தெஹிவளை, நாவலப்பிட்டி, ரொசெல்ல, ஹட்டன் மற்றும் கொட்டகலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இந்தக் குழுவினரை நுகேகொட நீதவான் நீதிமன்றில் நேற்று (07) ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், பொரலஸ்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



ஐரிஎன் வசந்தம் தொலைக்காட்சி மற்றும் வானொலி செய்திகளின் உதவி முகாமையாளர் எம்.சித்தீக் ஹனிபா எழுதிய 'ஆளுமையின் அடையாளம் அதிபர் ரவூப்டீன்' என்னும் நூல் வெளியீட்டு விழா வரக்காப்பொலை பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியில் ஓய்வுபெற்ற அதிபர் காதி நிதிபதி எம்.எம்.எம்.அமீர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், சிறப்பு அதிதியாக மனித அபிவிருத்தித் தாபனத்தின் பணிப்பாளர் கலாநிதி பீ.பீ.சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொண்டனர். (இக்பால் அலி)

# கொட்டாஞ்சேனையில் துப்பாக்கிச் சூடு



கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் நேற்று (07) காலை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நீதிமன்ற வழக்கு ஒன்றிற்காக முச்சக்கர வண்டியில் பயணித்த நபரொருவர் மீது காரில் வந்த ஒருவர் முச்சக்கரவண்டியில் பயணித்த நபரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், அவர்மீது துப்பாக்கிச்சூடு படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச்சூடு நடத்தியது யார், என்ன காரணத்திற்காக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்பது தொடர்பான காரணம் வெளியாகவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





இலக்கியத்தை உயிர்மூச்சாகக்கொண்ட புகழ்மிக்க எழுத்தாளர் அந்தோனி ஜீவாவிற்கான கௌரவிப்பு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) மாலை நடைபெற்றபோது, வவுனியூர் இரா.உதயணன், புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி மரியாதை செலுத்துவதையும் அருகில் திருமதி அந்தனி ஜீவா, கவிஞர் சு.முரளிதரன் உட்பட ஏனையோரையும் படங்களில் காணலாம்.

# வெளிநாட்டு வாழ்க்கை பற்றிய ‘கனவுல வாழுறேனே’ பாடல் கட்டாரில் வெளியீடு!









**(காத்தான்குடி செய்தியாளர்)**

வெளிநாட்டில் பணி புரியும் தமிழர்களின் வலிகளைச் சொல்லும் ‘கனவுல வாழுறேனே’ தனியிசைப் பாடல் வெளியீட்டு விழா ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை (03) கட்டார் வொண்டர் பேலஸ் ஹோட்டலில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது. இந்நிகழ்வில், ‘கனவுல வாழுறேனே’ பாடலின் ஆசிரியரும், தயாரிப்பாளருமான த.சண்முக பாண்டியன் பாடலை வெளியிட்டார். பாடலுக்காக பணியாற்றிய பாடல் இயக்குனர் செபஸ்ரியன், இசையமைப்பாளர் மோகன் ராம், நடிகை இவள் நந்தினி, நடிகர் அரவிந்த் ஆகியோர் காணொளி மூலம் நிகழ்வில் உரை நிகழ்த்தினர்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஸ்கை தமிழ் வலையமைப்பின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி வரவேற்புரை நிகழ்த்தியிருந்தார்.

மேலும், சிறப்பு அதிதிகளாக கட்டார் தமிழர் சங்கத்தின் நிறுவுனர் டாக்டர் துரைசாமி குப்பன், முன்னாள் QTS தலைவர் விஜயன் பாபுராஜ், கட்டார் தமிழர் சங்க துணைத் தலைவர் சக்திவேல் மகாலிங்கம், கட்டார் தமிழர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் கௌரி சங்கர், தொழிலதிபர் யாழினி குமார், ஒருங்கிணைந்த தமிழர் பேரவைத் தலைவர் சமீர், கட்டார் முத்தமிழ் மன்றம் - குரு, சிந்து தமிழ், ரெஜினா, விஜய் ஆனந்த், கவிஞர் சிவசங்கர், கட்டார் ரஜினி மக்கள் மன்றம் தலைவர் ரஜினி கீர்த்தி, கட்டார் தமிழர் முன்னேற்ற சங்கத்தின் பொதுச் செயலாளர் கார்த்திக், கவிஞர் மனோ கௌதம், பிரியா - இலங்கை மகளிர் அமைப்பு கட்டார், ரினோஸ் - டோஹா வானொலி தமிழ், சத்யராஜ், செந்தமிழ் செல்வன், முருகன், தஸ்தகீர் சுலைமான், மணிகண்டன் ஐயப்பன் - சகாபாக்கள் நூலகம், தமிழ்மகன் அகமது பைசல், கவிஞர் தஞ்சாவூரான், கவிஞர் சிக்கந்தர் ஆகிய பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

‘கனவுல வாழுறேனே’ என்ற இந்தப் பாடலை விஜய் ரிவி சுப்பர் சிங்கர் புகழ் சாம் விஷால் பாடியுள்ளார். இப்பாடலை வெளியிட்ட பாடலாசிரியர், தயாரிப்பாளர் டி.சண்முக பாண்டியன் ஆகியோரை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் மற்றும் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி ஆகியோர் கௌரவித்தனர்.

கட்டார் தமிழ் உறவுகள் அமைப்பினர் இப்பாடலுக்கு சிறப்பான நடனம் ஒன்றை நிகழ்த்திய அதேவேளை, முஸ்தாக் அகமத் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# பெண்கள் குறித்தான ....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதவிடாயை ஆரோக்கியமான முறையில் முன்னெடுப்பதற்கான வழிமுறைகள் தெரியாமை என்பன பிரச்சினைகளாக இனங்காணப்பட்டன. 17 மாவட்டங்களில் இளைஞர் குழுக்கள் இந்த விழிப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. ஆனாலும் அவர்களால் எவ்வளவு தூரம் முழுமையாக உரிய விழிப்புணர்வுப் பரவலை ஏற்படுத்த முடியுமென்பது கேள்விக்குரியதே.

இங்கு ஏன் அணையாடைகளை வாங்கி பயன்படுத்துவதில்லை என்று பார்க்கும்போது அதன் விலை முக்கிய காரணியாக அமைந்திருந்தது. 130 ரூபாவுக்கு இருந்த நப்கின்கள் 420 ரூபாவுக்கு விற்பனையாகத் தொடங்கின. இந்த விடயத்தை ஆழமாக ஆராய்ந்து பார்க்கும்போதுதான் பாடசாலை இடைவிலகல் பற்றியும் தெரிய வந்தது. மாதவிடாய்கால வறுமையில் அணையாடை விலைகள்தான் மிக முக்கிய காரணியாக உள்ளன. இன்றைய நிலையில் உணவுக்காக பணத்தைச் செலவு செய்வதா அணையாடைக்குச் செலவு செய்வதா என்ற தெரிவு பிரதானமாக பெற்றோருக்கு ஏற்படுகின்றது.

புத்தளம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மேற்கொண்ட ஆய்வில் இவ்விடயம் தெரியவந்தது. மட்டக்களப்பில் அரச உத்தியோகத்தர்களே அதிகம் பாடசாலை இடைவிலகல்கள் இடம்பெறுவதாக தெரிவித்திருந்தனர். இதற்குக் காரணம், பதின்ம வயது திருமணங்கள் என்று கூறப்பட்டாலும் ஆழ ஆராய்ந்து பார்க்கும்போது இதுவும் முக்கிய காரணமாக அமைந்திருந்தமை தெரியவந்தது.

மேலும் மாதவிடாய் ஏன் வருகின்றது என்று பிள்ளைகளுக்குத் தெரியாது. யாராவது வந்து துஷ்பிரயோகம் செய்யும்போது அதற்கு விளக்கமின்றி உடன்படும் நிலை ஏற்படுகின்றது. அதன் தாக்கம் பற்றித் தெரியாது. மாதவிடாய் ஏன் வருகின்றது என்ற விளக்கத்தை வழங்கினால் கூட அந்தப் பிள்ளை தன்னைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கும். பெற்றோர்கள் இதுபற்றியெல்லாம் பிள்ளைகளுடன் பேசுவதே இல்லை. ஏதாவது சம்பவங்கள் நடைபெறும்போது பெண் பிள்ளைகளின் கல்வி முடக்கப்படுகின்றது. இதுபற்றிய சரியான புள்ளிவிபரங்களை பாடசாலைகள் தருவதில்லை. ஏனெனில், இதனால் பாடசாலைக்குக் கிடைக்கும் உரிய ஒதுக்கீடுகள் கிடைக்காது என்று அச்சம் பிரதான காரணமாகி விடுகின்றது. மாதவிடாய் தொடர்பான அறிவைப் பெறுவதற்கான அணுகல்களும் (Accessing Services) இல்லாத நிலையே உள்ளது. குடும்ப நல தாதியர்களால் மட்டுப்படுத்தப்பட்டளவு சேவையை மட்டுமே வழங்கக்கூடியதாக உள்ளது.

மேலும் பாடசாலைகளில் அணையாடைகளை மாற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. மலசலகூட வசதியில்லை. புத்தளம் நகர சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயற்பாடுகள் இங்கு ஏனையோருக்கு முன்னோடியாகவுள்ளன. பெண்களுக்கும் பொதுவாகவும் அவர்கள் மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளனர். பாடசாலைகளிலும் அவ்வாறு உள்ளூராட்சி சபையில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் நிர்மாணப்பணிகளை மேற்கொள்கின்றனர். அது மிகவும் வரவேற்கக்கூடிய செயற்பாடாகும்.

**Q அணையாடைகளுக்கான வரி அதிகரிக்கப்பட்ட நிலையில், சமூகத்தில் ஏற்பட்ட எதிர்ப்புணர்வுகள் மத்தியில் அந்த வரி நீக்கப்பட்டுள்ள நிலையில் தற்போதும் இந்த நிலைமையில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லையா?**

இந்த நிலைமைகளில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லையென்றே கூறவேண்டியுள்ளது. பாடசாலைக்கு பெண் பிள்ளைகள் சமுகமளிக்காமைக்குக் காரணம் பிள்ளைகளால் புத்தகங்களை வாங்க முடியாததும், அணையாடைகளை வாங்க முடியாததுமாகும். ஒரு அணையாடையோடுதான் பிள்ளை பாடசாலைக்கு செல்கின்றதாயின் பல மணித்தியாலங்கள் அதனை மாற்றாமல் இருப்பதனால் பிள்ளைக்கு நோய்த்தொற்று ஏற்படுகின்றது. அதனால் பாடசாலை வர முடியாமல் பாடங்களைத் தவறவிட்டுத் தொடர்ச்சியாக பாடசாலைக் கல்வியைக் கைவிடவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

**Q அரசாங்கம் இவ்விடயத்தில் எவ்வாறான தலையீட்டை முன்னெடுக்க வேண்டும்?**

மாதவிடாய் அணையாடைகளை பொருளாதார நிலைமையில் பின்னோக்கியுள்ள குடும்பங்களைத் தெரிவுசெய்து இலவசமாகப் பெண்களுக்கு வழங்கவேண்டும். அணையாடைக்கான உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்தலும், அவ்வாறு உற்பத்திசெய்ய முன்வருபவர்களுக்கு உதவிகளையும் சலுகைகளையும் அளிக்க அரசாங்கம் முன்வருவதும் கட்டாயமானது. யாழ். பல்கலைக்கழகத்தில் இதற்காக இயந்திரங்கள் அனைத்தும் உள்ளன. ஆனால், மூலப்பொருட்களை வெளியிலிருந்து எடுக்கவேண்டியுள்ளது. அத்துடன், இதனை முன்னெடுக்கப் பயிற்றுவிக்கப்பட்ட மனித வளமும் தேவை. மாவட்ட மட்டத்தில் இந்தப் பயிற்சிகளை வழங்குவது அவசியம். தொழில்வாய்ப்பும் சமூகநலமும் ஒருங்கே முன்னேற நாம் திட்டமிட்டு யுக்திகளை வகுத்துச் செயற்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினை நூற்றுக்கு நூறு சதவீதம் அவதானம் செலுத்தவேண்டிய விடயம். இதில் எந்தவொரு மாற்றுக்கருத்தும் இல்லை. மாநாட்டிலும் நாங்கள் சொன்ன விடயம் பதின்ம வயது திருமணங்களை இல்லாமல் செய்வதற்கு முக்கியமான விடயம் மாண்புமிகு மாதவிடாய் பற்றி மக்கள் மத்தியில் பேச வைப்பதாகும். இதுதான் ஆரம்ப கட்டம். சமூகத்தில் உரையாடல்கள் நிகழ நிகழ விழிப்புணர்வு அதிகரிக்கும். மாதவிடாய் பற்றியும், மாதவிடாய் சுகாதாரம் பற்றியும் விழிப்புணர்வு வரும். நாட்டின் மற்றைய தேவைகளைப் பற்றி எந்தளவுக்கு அக்கறை செலுத்துகின்றோமோ அதே அளவுக்கு இந்தப் பிரச்சினைக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பற்றி பேசிக்கொண்டிருப்பதால் பயனில்லை. நடைமுறை அமுலாக்கம் பற்றியே யோசிக்க வேண்டும். இதனால்தான் பாடசாலைகளிலிருந்தே மாண்புமிகு மாதவிடாய் பற்றி பேசுவதை 2023ஆம் ஆண்டுக்கான தொனிப்பொருளாக எடுத்துள்ளோம். பாடசாலைகளில் இதுபற்றி பேச வேண்டும் என்று பரவலான கருத்து உள்ளது. ஏனெனில், சில குறிப்பிட்ட பாடங்களை ஆசிரியர்கள் கற்பிக்காமல் விட்டு விடுகின்றனர். மாதவிடாய் பற்றிய விழிப்புணர்வு பற்றி பேசினாலும் மாண்புமிக்க மாதவிடாய் பற்றி எவரும் அவதானம் செலுத்துவதில்லை. அதனால்தான் நாம் விடயத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

நாம் கல்வியில் சுகாதாரத்தில் பண்பாட்டில் சிறந்து விளங்குகின்றோம் என்று பெருமைப் பட்டுக் கொள்கின்றோம்.

ஆனால், பெண்களின் மாதவிடாய் காலங்களில் அவர்களுக்கான ஓய்வை வழங்குவதோ அல்லது சுகாதாரப் பழக்கங்ளைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதோ மிக அரிதாகவே உள்ளது.

இது சாதாரண விடயம், இயற்கையான விடயம் என்ற மெத்தனப்போக்கும் மதிப்பளிக்காத தன்மையும் குடும்பத்திலிருந்துதான் ஆரம்பிக்கின்றது. குடும்பத்தில் உள்ளவர்கள் எப்பொழுது இந்தமாதவிடாய் என்பது பெண்களுக்கே உரித்தான மதிப்பளிக்க வேண்டிய ஓர் உடற்தொழிற்பாடு என்பதனை ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றார்களா அன்றுதான் ‘மாண்புக்குரிய மாதவிடாய்’ என்ற எண்ணக்கரு பெருமையைப் பெற ஆரம்பிக்கும்.

மாதவிடாய் பற்றியும் அதனால் பெண்களுக்கு ஏற்படும் உள, உடல் பாதிப்பு பற்றியும் பரவலாகப் பேசாதவரை இந்தப் பிரச்சினை எல்லா இடத்திலும் இருக்கும். இதுபற்றி நாங்கள் ஆண் பிள்ளைகளுடன் பேசுவதில்லை. ஏனெனில், அவர்கள் இவற்றை எதிர்கொள்வதில்லை. அதனால்தான் பெண்கள் பூப்பெய்தல் என்பது அவர்களுக்கு ஆச்சரியத்தையும், ஆர்வத்தினையும் தூண்டுவதாக உள்ளது. பாலியல் கல்வியை நாம் ஆரம்பக்கல்வி முதலே சொல்லிக் கொடுக்க தொடங்க வேண்டும்.

இந்த விடயங்களைப் பற்றி பேசுவதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். பாலியல் கல்வியை எப்பொழுது பாடசாலை மட்டங்களில் கொண்டுவர முயற்சிக்கின்றோமோ அதேபோன்று மாதவிடாய் பற்றி பேசுவதற்கும் வழியேற்படுத்த வேண்டும். மாண்புமிக்க மாதவிடாய் பற்றி சிறிய கார்ட்டூன் புத்தகம் ஒன்றைத் தயாரித்து விநியோகிக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதுவும் பெண்களின் உரிமைதான். ஆனால் அது பற்றி பேச எத்தனைப் பேர் முன்வருகின்றார்கள்? இளைஞர் குழுக்கள் முன்வரும் அளவுக்குச் செயற்பாட்டாளர்கள் முன்வருவதில்லை.




**பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அவசரத் தேவை கருதி ஒருதொகுதி மருந்துப் பொருட்களை பொத்துவில் மத்திய கல்லூரி 1995ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பிரிவு மாணவர்கள் வழங்கியுள்ளனர். குறித்த பொருட்களை வைத்தியசாலைக்கு வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (06) இடம்பெற்றது. பொத்துவில் ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.ஐ.எம்.றஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது அமைப்புகள் வழங்கிவரும் ஒத்துழைப்புகளை பாராட்டினார். அதேவேளை, குறித்த மருந்துப்பொருட்களை வழங்கிய பொது அமைப்புகள் மற்றும் பழைய மாணவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்தார்.**

**(பொத்துவில் செய்தியாளர்)**

# அலுவலக ஊழியர்களின் நன்மை கருதி இராணுவ வீதிச் சோதனைச்சாவடி அகற்றல்



(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

நிந்தவூர் பிரதான வீதியிலும் அக்கரைப்பற்று - அம்பாறை பிரதான வீதியிலும் அமைந்துள்ள இராணுவ சோதனைச்சாவடியை வாரநாட்களில் காலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை அகற்றுவதற்கு இராணுவத்தின் 24ஆம் காலாட் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்ரசிறி அனுமதி வழங்கியுள்ளார்.

நிந்தவூர் இளைஞர் தன்னார்வ அணியின் வேண்டுகோளின் பிரகாரம், திங்கட்கிழமை (06) காலை, மல்வத்தையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் 24ஆம் காலாட் படைப்பிரிவின் இராணுவ முகாமில் நடைபெற்ற சிநேகபூர்வ சந்திப்பின்போதே கட்டளைத் தளபதியினால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இந்த பிரதான வீதியின் ஊடாக அதிகமான உத்தியோகத்தர்கள் காலைவேளையில் அலுவலகங்களுக்கு செல்வதினால், பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருவதுடன், இந்த சோதனைச்சாவடியில் தரித்துநிற்கும் நேரம், அலுவலக கடமை நேர தாமத கைவிரல் அடையாளப் பதிவு செய்யவேண்டிய அசௌகரியமான நிலைமைக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த விடயம் பற்றி நிந்தவூர் இளைஞர் தன்னார்வ அணியின் செயற்பாட்டாளர்களான ஊடகவியலாளர் சுலைமான் றாபி மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணிப்பாளர் சபை உறுப்பினரும், கிழக்கு மாகாண ஆளுநரின் ஆயுர்வேதத் துறைக்கான இணைப்பாளருமான சுலைமான் நாசிறூன் ஆகியோர், இலங்கை இராணுவத்தின் 24ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்ரசிறியின் கவனத்திற்குகொண்டு வந்ததையடுத்து, குறித்த வீதிகளிலுள்ள இராணுவ வீதிச் சோதனைச்சாவடிகளை அகற்ற அனுமதி வழங்கப்பட்டு அவைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில், இலங்கை இராணுவ 18ஆவது விஜயபாகு காலாட் படையணி கட்டளை அதிகாரி மேஜர் உதித்த கலுஆராச்சி மற்றும் இலங்கை இராணுவ 241ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கேர்ணல் பதிரத்ன ஆகியோரின் வழிநடத்தலுடன், நேற்று செவ்வாய்க்கிழமை (07) காலை 06.00 மணிமுதல் 09.00 மணிவரை குறிப்பிட்ட பிரதேசங்களில் அமையப்பெற்றுள்ள இந்த சோதனைச்சாவடிகள் அகற்றப்பட்டிருந்தன.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து திருமலையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சிறு வலைகள் மற்றும் தூண்டல்கள் மூலமாக மீன்பிடியில் ஈடுபடுவோர் நேற்று செவ்வாய்க்கிழமை (07) பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் தேசிய மீனவப் பெண்கள் சம்மேளனம் ஆகியன ஏற்பாடு செய்திருந்த குறித்த போராட்டத்தில் திருகோணமலையைச் சேர்ந்த மீனவக் குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

நாட்டில் காணப்படும் பொருளாதாரச் சுமை, எரிபொருள் விலையேற்றம், மின் மற்றும் நீர்ப்பட்டியல்களின் விலையேற்றம் என்பவற்றை அரசு உடனடியாக முகங்கொடுத்து அதற்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி குறித்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கையெழுத்திடப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு பேரணியாக சென்ற மீனவ சமூகத்தினரால் ஆளுநரது செயலாளரிடம் வழங்கப்பட்டது.







திருகோணமலை உப்புவெளியிலுள்ள பஸ் டிப்போ ஊழியர்கள் தற்போதுள்ள முகாமையாளரை நீக்கி, தகுதியான முகாமையாளரை நியமிக்குமாறு கோரி நேற்று செவ்வாய்க்கிழமை (07) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். திருகோணமலை பஸ் டிப்போவிலிருந்து எந்த பஸ்களும் நேற்றைய தினம் பணியில் ஈடுபடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(கந்தளாய் செய்தியாளர்)

## போடியார் புலம்பல்!



**வெட்கம் கெட்ட நம்மட நாட்டில 420 பொது நிறுவனங்களில் 32 நிறுவனங்கள் ஊழல் உள்ள நிறுவனமாம் எண்டு பாராளுமன்ற கோப் குழு ஆக்கள் சொல்லி இருக்காங்க எலுவா? அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி எண்டத சோக்கா அந்த 32 கந்தோர்காரர்களும் நிரூபித்து ஆசியாவில ஆச்சரியம் நம்மட நாடு எண்டத காட்டின அவங்கள கௌரவிக்கோணும் எலுவா?**

# காத்தான்குடியில் 4 கிராம் 770 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)



காத்தான்குடி கடற்கரை வீதியில் வியாபாரத்துக்காக மோட்டார்சைக்கிளில் 4 கிராம் 770 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை எடுத்துச்சென்ற வியாபாரி ஒருவரை விசேட அதிரடிப்படையினர் திங்கட்கிழமை (06) இரவு கைதுசெய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, அதிரடிப் படை கட்டளைத்தளபதி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் ஆலோசனைக்கமைய அதிரடிப்படை அம்பாறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஏ.டி.டி. நெத்தசிங்கவின் வழிகாட்டலில் மட்டக்களப்பு பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.சி.வெலிட்டவிதான, கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஆர்.டீ.சி.எஸ்.ரத்நாயக்கவின் அறிவுறுத்தலுக்கமைய உப பொலிஸ் பரிசோதகர் குழுவினர் சம்பவதினமன்று மாலை 6 மணியளவில் காத்தான்குடி கடற்கரை வீதியில் பள்ளிவாசலுக்கு அருகாமையில் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது, மோட்டார்சைக்கிள் ஒன்றில் வியாபாரத்துக்காக ஐஸ் போதைப்பொருளை எடுத்துக்கொண்டு வந்த வியாபாரியை விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்து கைதுசெய்ததுடன் போதைப்பொருளையும் மீட்டுள்ளனர். இதில் கைது செய்யப்பட்டவரையும் ஐஸ் போதைப்பொருள் மற்றும் மோட்டார்சைக்கிள் ஒன்றையும் அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளதாகவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜயத்தின் "125ஆவது ஆண்டு" நிறைவு நாள் நிகழ்வு







(மட்டக்களப்பு)

சுவாமி விவேகானந்தரின் வரலாற்றுச் சிறப்புமிக்க இலங்கை விஜயத்தின் "125ஆவது ஆண்டு" ஓராண்டு தொடர் விழாவின் நிறைவு நாள் நிகழ்வு மட்டக்களப்பில் மிகப் பிரமாண்டமாக திங்கட்கிழமை (06) இடம்பெற்றது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜின் ஏற்பாட்டில் இலங்கைக்கான இராமகிருஷ்ண மிஷன் கிளைத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மஹராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் வளாகத்திலிருந்து பிரதம அதிதிகள் உள்ளிட்ட அதிதிகளுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய இசை முழங்க வரவேற்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, சுவாமி விபுலானந்த அடிகளாரின் சமாதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உலகளாவிய இராமகிருஷ்ணமிஷன் மற்றும் மடங்கள், இந்தியா - பேலூர் தலைமையகத்தின் உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சத்யேஷானந்தஜி மஹராஜ் வருகை தந்திருந்ததுடன், சிறப்பு விருந்தினராக மட்டக் களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அத்தோடு, இராமகிருஷ்ணமிஷன் வளாகத்தில் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான பயிற்சி மையம் திறந்துவைக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

## 11வயது சிறுவன் சடலமாக மீட்பு

அம்பாறை பொத்துவில் கோமாரி முகத்துவார களப்பிலிருந்து 11 வயதுடைய சிறுவன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பிரதேச பொதுமக்கள் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை (06) மதியம் 12 மணிக்குப் பின்னர் சிறுவன் காணாமல்போன நிலையில் பொத்துவில் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டிருந்தது. இந்நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை(07) காலை கோமாரி முகத்துவார களப்பிலிருந்து குறித்த சிறுவனின் சடலத்தைப் பொதுமக்கள் மீட்டுள்ளனர்.

உயிரிழந்த சிறுவன் கோமாரி மெதடிஸ்த மகா வித்தியாலயத்தில் தரம் 06இல் கல்வி பயிலும் 11 வயதுடைய சொர்ணலிங்கம் ஜனுஷாந்த் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கோமாரி களப்பின் முகத்துவாரப் பகுதி இரண்டு வருடங்களின் பின்னர் கடந்த வாரம் வெட்டப்பட்டு வெள்ளநீர் வெளியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் தடுப்பு மற்றும் சிவில் பாதுகாப்புக் குழு தெரிவு



(மட்டக்களப்பு)

பிரதேச செயலக மட்ட போதைத்தடுப்பு குழுக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் கிராம சேவையாளர் ஊடாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிவில் பாதுகாப்பு குழுக்கள் மீள் உருவாக்கம் செய்யப்படல் எனும் கருப்பொருளுக்கு அமைவாக, திங்கட்கிழமை (06) வாழைச்சேனை 206D கிராமசேவகர் பிரிவில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான கலந்துரையாடல் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழு தெரிவு என்பன இடம்பெற்றதுடன், பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இதில் கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதாரப் பரிசோதகர், போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அதேபோன்று, போதைப்பொருள் தடுப்பு தொடர்பான கலந்துரையாடல் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழு தெரிவு மாவடிச்சேனை கிராமசேவகர் பிரிவிலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடியில் 'கிளி மூக்கு சேவல்' கண்காட்சி



(மாளிகைக்காடு செய்தியாளர்)

அகில இலங்கை ரீதியாக கிளி மூக்கு சேவல்களுக்கான கண்காட்சி கிழக்கு மாகாணம் காத்தான்குடியில் மிக விமர்சையாக ஞாயிற்றுக்கிழமை (05) காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை இடம் பெற்றது.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக இக் கிளி மூக்கு சேவல்களுக்கான கண்காட்சி, 60 சேவல்களும் அதன் வளர்ப்பாளர்கள் 45 பேருடன் சிறப்பாக இடம்பெற்றது. இக் கண்காட்சியில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் அனைத்து பகுதிகளிலிருந்தும் கிளி மூக்கு கோழி வளர்ப்பாளர்கள் வருகை தந்திருந்தனர்.

இவை தென்னிந்தியாவில் தமிழ் நாட்டைப் பூர்வீகமாகக்கொண்ட போதிலும் தற்போது பல நாடுகளில் அழகிற்காக வளர்க்கப்பட்டு வருவதுடன். எம்முடன் பாசத்தோடும்எமது வீட்டின் ஓர் அங்கமாகவும் மாறிவிட்டதாக வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

பிறப்பு விகிதம் சரிவு:

## ஜப்பான் என்ற நாடே இல்லாமல் போகும் அபாயம்



பிறப்பு விகிதாசாரத்தை அதிகரிக்காவிட்டால், ஜப்பான் என்ற நாடே இல்லாமல் போய்விடும் - என அந்நாட்டு பிரதமரின் ஆலோசகர் எச்சரித்துள்ளார்.

கடந்தாண்டில் அங்கு 8 இலட்சம் குழந்தைகள் பிறந்த நிலையில், 16 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். பிறப்பு விகிதாசாரத்தை விட இறப்பு விகிதாசாரம் இரட்டிப்பாகியுள்ளது.

மேலும், கடந்த 15 ஆண்டுகளில் நாட்டின் மக்கள் தொகை 35 இலட்சம் குறைந்துள்ளது. இதே நிலை நீடித்தால், வருங்காலத்தில் இளைஞர் சக்தி வெகுவாக குறைந்து, வேலைக்கு ஆட்கள் கிடைக்காமல் பொருளாதாரம் சீர்குலைந்துவிடும் என அஞ்சப்படுகிறது.

மக்கள் தொகையை அதிகரிக்க, தாய்மார்களுக்கு வழங்கப்படும் குழந்தை பராமரிப்புச் செலவுகளை உயர்த்தப்போவதாக அந்நாட்டு பிரதமர் அறிவித்துள்ளார்.

## இதய வலி ஆபத்தை அதிகரிக்கும் கொரோனா



கொரோனா பாதித்து 6 மாதத்துக்குப் பின்னர் இதய வலிக்கான பாதிப்பை அதிகரிக்கும் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அமெரிக்காவின் இன்டர்மவுண்டன் ஹெல்த் அமைப்பின் ஆய்வாளர்கள், கொரோனா பாதித்த 1.50 இலட்சம் பேரிடம் சோதனை மேற்கொண்டனர். இதில், கொரோனா தொற்று ஏற்பட்ட பிறகு 6 மாதம் முதல் ஓராண்டுக்குள் இதய வலி ஏற்படுவதற்கான ஆபத்துகள் அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுவே, நீண்டகால கொரோனா பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு 4 வாரங்கள் அல்லது அதற்கு மேலான காலகட்டத்தில் இதய வலி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இலேசான தொற்று ஏற்பட்டவர்களுக்கு மாரடைப்பு அல்லது பக்கவாத பாதிப்புகள் ஏற்படுவதற்கான விகிதங்கள் பெரியளவில் இல்லை. ஆனாலும், இதய வலி தொடர்ச்சியான பிரச்சினையாக இருப்பது கண்டறிப்பட்டுள்ளது. இது எதிர்கால தீவிர இதய பாதிப்புகளுக்கான அறிகுறியாகவும் இருக்க வாய்ப்புள்ளதென எச்சரிக்கப்பட்டுள்ளது.

உலக செய்திகள்

## எகிப்தின் கிசா பிரமிட்டில் இரகசிய அறை கண்டுபிடிப்பு



எகிப்தில் அமைந்துள்ள பிரபல பிரமிட்டான கிசாவில் இரகசிய அறை இருப்பதற்கான காணொளியை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

பண்டைய காலத்து எகிப்தியர்களிடம் இறந்தவர்கள் உயிருடன் வருவார்கள் என்ற தீவிர நம்பிக்கை இருந்தது. இதனால், இறந்தவர்களின் உடலின் முக்கிய பாகங்களை குடுவையில் அடைத்து அவர்களது உடலை வாசனைத் திரவியத்தால் பதப்படுத்தி பிரமிட்டுகளில் புதைக்கும் பழக்கம் இருந்தது. இதனாலேயே பிரமிட்டுகள் உலக அதிசயங்களில் ஒன்றாக பார்க்கப்பட்டு வருகின்றன.

## அண்டை வீட்டுச் சுவர் ஏறி குதித்த இம்ரான் கான்



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தான் கைதுசெய்யப்படுவதிலிருந்து தப்பிக்க பக்கத்து வீட்டுச் சுவர் ஏறி குதித்து தப்பிச் சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு உள்துறை அமைச்சர் ராணா சனாவுல்லா, ஞாயிற்றுக்கிழமை இஸ்லாமாபாத் பொலிஸார் இம்ரான் கானை கைதுசெய்ய லாகூர் சென்றதாகவும், அப்போது அவர் தனது வீட்டுச் சுவரைத் தாண்டி அண்டை வீட்டுக்குள் புகுந்து தப்பிச் சென்றதாகவும் தெரிவித்தார்.

பிரதமர் பதவி வகித்தபோது, அவருக்குக் கிடைத்த பரிசுப் பொருட்களை அரச கருவூலத்தில் ஒப்படைக்காமல், கோடிக்கணக்கான ரூபாவுக்கு விற்றதாக இம்ரான் கான் மீது குற்றச்சாட்டு எழுந்தது. இந்த வழக்கில், அவரால் பிணையில் வெளிவர முடியாதபடி நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. இம்ரான் கான் இல்லத்தில் குவிந்த கட்சித் தொண்டர்கள், பொலிஸாரை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸார் வீட்டிற்குள் சென்று தேடியபோது இம்ரான் கான் அங்கு இல்லாததால், அடுத்தகட்ட நகர்வு குறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசிக்க திட்டமிட்டுள்ளனர். இந்நிலையில், இம்ரான் கான் கைதிலிருந்து தப்பிக்க பக்கத்து வீட்டுச் சுவர் ஏறி குதித்து தப்பிச் சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

மாணவிகளுக்கு விஷம் வைத்த விவகாரம்:

## குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்க ஈரான் தலைவர் பரிந்துரை



''ஈரானில், ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவிகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டது மன்னிக்க முடியாத குற்றம். குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்க வேண்டும்'' - என அந்நாட்டின் தலைவர் அயதொல்லாஹ் அலி கஹமெனி (Ayatollah Ali Khamenei) பரிந்துரைத்துள்ளார்.

ஹிஜாப் சரியாக அணியாத இளம்பெண், நல்லொழுக்கப் பொலிஸாரால் தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இதனைக் கண்டித்து, நாடு தழுவிய போராட்டங்கள் வெடித்தன.

இந்நிலையில், கடந்த நவம்பர் மாதம் முதல் பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவிகளின் உடல்நலன் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

பெண் கல்விக்கு எதிரானவர்களால் மாணவிகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## பலோசிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்: பொலிஸார் 9 பேர் பலி ; 7 பேர் காயம்



பாகிஸ்தானின் எரிவாயு மற்றும் கனிம வளங்கள் நிறைந்த பலோசிஸ்தான் மாகாணத்தை தனிநாடாக அறிவிக்கக்கோரி பல தசாப்தங்களாக போராடிவரும் பிரிவினைவாதக் குழுக்கள், அண்மையில் பொலிஸாரை குறிவைத்து தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளன.

இந்நிலையில், பலோசிஸ்தான் மாகாணத்தில், பொலிஸ் லொறி மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைப்பதைத் தாக்குதலில், 9 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளதுடன், 7 பேர் காயமடைந்துள்ளனர்.

## பர்கினோ பாஸோவில் துப்பாக்கிச்சூடு;12 பேர் பலி

மேற்கு ஆபிரிக்க நாடான பர்கினோ பாஸோவில் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் தலைநகர் உவாகிகவ்யாவிற்கு வடக்குப் பகுதியிலுள்ள கிராமமொன்றில் புகுந்த துப்பாக்கி ஏந்திய நபர்கள், சிறுவர்களை குறிவைத்து கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் 7 சிறுவர்கள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர்.

## கல்லடி விவேகானந்தா கல்லூரி இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி




(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா கல்லூரியின் 2023ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை (04) கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

கல்லடி விவேகானந்தா கல்லூரி அதிபர் திருமதி நவகீதா தர்மசீலன் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில், ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தர் மகராஜும், பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரும், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.ஹரிகரராஜ், மட்டக்களப்பு மண்முனை வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.ரவிச்சந்திரா மற்றும் மட்டக்களப்பு கல்வி வலய விளையாட்டுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.லவக்குமார் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இதன்போது சாரதா இல்லம் 693 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், நிவேதிதா இல்லம் 674 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், அபவாமியா இல்லம் 597 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இப்போட்டிகளில் அணிநடை, உடற்பயிற்சிக் கண்காட்சி ஆகியன அனைவரதும் கவனத்தை ஈர்த்தன.

## சொந்த மண்ணில் உலக சம்பியனுக்கு அதிர்ச்சியளித்த பங்களாதேஷ்




ஒருநாள் உலக சம்பியனான இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இங்கிலாந்துக்கு அதிர்ச்சியளித்தது.

சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்ற 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த பங்களாதேஷ் அணி, 48.5 ஓவர்களில் 246 ஓட்டங்கள் எடுத்தது. ஷான்டோ 53, முஷ்ஃபிகுர் ரஹிம் 70, ஷகிப் அல்-ஹசன் 75 ஓட்டங்கள் எடுத்தார்கள். ஜோஃப்ரா ஆர்ச்சர் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பங்களாதேஷ் வீரர்கள் சிறப்பாகப் பந்துவீசி இங்கிலாந்து அணியை 196 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்தார்கள். ஜேம்ஸ் வின்ஸ் அதிகபட்சமாக 38 ஓட்டங்கள் எடுத்தார். ஷகிப் அல்-ஹசன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்டநாயகன் விருதை வென்றார். ஒருநாள் தொடரில் 8 விக்கெட்டுகள் எடுத்த ஆதில் ரஷித், தொடர் நாயகன் விருதை வென்றார். முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை 2-1 என வென்றது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## கண்டி அசோக்கா தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி



(கண்டி நிருபர்)

கண்டி அசோக்கா தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கண்டி மஹய்யாவ பி.டி.ஆர்.ராஜன் மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது. பிரதம அதிதியாக கண்டி கிறீன்ஹில் கல்லூரி அதிபர் கலாநிதி லலித் நவரத்னவும் விசேட அதிதியாக திருமதி ஜீவா ராஜனும் கலந்துகொண்டனர்.

வித்தியாலய அதிபர் பீ.ரத்னவேல் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் பிரதம அதிதி பரிசு வழங்கினார்.

## மல்யுத்த சுற்றுப் போட்டியில் ஒன்பது தங்கப் பதக்கங்களை வென்ற மட்டக்களப்பு வீரர்கள்



(மட்டக்களப்பு)

அகில இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களங்களுக்கியிலான 2023ஆம் ஆண்டிற்குரிய மல்யுத்த சுற்றுப் போட்டியானது அண்மையில் பொலன்னறுவை றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் கோலாகலமான முறையில் நடைபெற்றது.

இதற்கு பிரதம அதிதிகளாக சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் கொடித்துவக்கு, பொலன்னறுவை சிறைச்சாலை அதிகாரி, மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரி, பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இப்போட்டியானது எடைப்பிரிவுகளுக்கு ஏற்ப நடைபெற்று மிகவும் விறுவிறுப்பாக நடந்து இறுதிக்கட்டத்தை அடைந்த தருணத்தில் மட்டக்களப்பு சிறைச்சாலை திணைக்களம் ஒன்பது தங்கப் பதக்கங்கள் மற்றும் பல பதக்கங்களை வென்று அகில இலங்கையில் முதலாவது அணியாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

இரண்டாவது அணியாக யாழ்ப்பாணம் சிறைச்சாலை தெரிவாகியது. போட்டியின் சிறந்த வளர்ந்துவரும் வீரராக மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர் குமாரசிறி தெரிவானார்.

## தலைவர் வெள்ளிக்கிண்ணப் போட்டியில் சன்பேட்ஸ் அணி சம்பியன்

(நானுஓயா நிருபர்)

நுவரெலியா உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் நடைபெற்ற தலைவர் வெள்ளிக்கிண்ணப் போட்டியில் சன்பேட்ஸ் அணி சம்பியனாகியது.

நுவரெலியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட 16 அணிகளுக்கிடையில் நுவரெலியா உதைபந்தாட்ட லீக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் வெள்ளிக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் நுவரெலியா மாநகர



சபை பொது மைதானத்தில் நடைபெற்றது. இதில் 4-2 என்ற கோல் எண்ணிக்கையில் நுவரெலியா ஸ்கிராப் தோட்ட சன்பேட்ஸ் அணி சம்பியனாகியது. இறுதிப் போட்டியில் பிரதான நடுவராக டி.எவ்.சூடின், உதவி நடுவர்களாக லோகேந்திரா மற்றும் சந்தோஷ், மூன்றாவது நடுவராக பிரதிபன் ஆகியோர் கடமையற்றினார்கள்.

இந்தப் போட்டிக்கு பிரதம அதிதியாக நுவரெலியா கால்பந்தாட்ட லீக்கின் தலைவரும் நுவரெலியா மாநகர சபை உறுப்பினருமான ஆர்.கேதிஸ் மற்றும் நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி சிவன்ஜோதி யோகராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7